விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 புரட்டாதி 25 முஹர்ரம் 25 இதழ் 243
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 11-10-1985

வல்வெட்டித்துறை சம்பவம்:

## யாழ். இணைப்பதிகாரியிடம் பிரஜைகள்குழு நேரில் புகார்

(ஏ. வி. மாணிக்கம்)

வல்வெட்டித்துறையில் கடந்த 8ம் திகதி பிற்பகல் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் பற்றி, இலங்கை வானொலி தெரிவித்த எதிர்மாறான தகவல் குறித்து, வல்வெட்டித்துறைப்பிரஜைகள்குழு, யாழ். மாவட்ட இணைப்பதிகாரியிடம் அதிருப்தி தெரிவித்துள்ளது.

நேற்று வல்வெட்டித்துறைப்

(11ம் பக்கம் பார்க்க)

## ஆந்திராவை புயல் இன்று தாக்கலாம்!

(புதுடில்லி)

வங்காள விரிகுடாவில் நிலைகொண்டுள்ள புயல் இன்று ஆந்திராப் பிரதேசத்தைத் தாக்கலாம் என்று அஞ்சப்படு

(11-ம் பக்கம் பார்க்க)

# ★ டில்லிப் பேச்சுக்களில் திடீர்த் திருப்பம்

# போர் நிறுத்தம்: ஈழ. தே. வி. மு.

# இணக்கம்! இலங்கை அரசுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது

## கண்காணிப்புக் குழுவும் விஸ்தரிக்கப்படும்

(புதுடில்லி)

**யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ள ஈழ தேசிய விடுதலை (கூட்டு) முன்னணி இணக்கம் தெரிவித்துள்ளது. இத்தகவல், புதுடில்லியிலுள்ள இலங்கைத் தூதர் மூலமாக நேற்றிரவு இலங்கை அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டது.**

தமிழ்க் குழுக்களுக்கும், இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரிக்குமிடையே கடந்த ஒருவார காலமாகப் புதுடில்லியில் தொடர்ச்சியாக நடைபெற்று வந்த பேச்சுவார்த்தைகளில் திடீர்த் திருப்பமாக நேற்று நான்கு யுத்த நிறுத்த இணக்கம் ஏற்பட்டது.

நான்கு குழுக்களைக்கொண்ட ஈழ தேசிய விடுதலை முன்னணியின் யுத்த நிறுத்த இணக்கம் நேற்று இரவு இலங்கை அரசாங்கத்துக்கு உத்தியோக

(11ம் பக்கம் பார்க்க)

## இராணுவ வாகனம் மீது கைக்குண்டு வீச்சு

### துப்பாக்கிபிரயோகத்தில் இருவர் பலி!

(கொழும்பு)

மன்னார் - முருங்கன் வீதியிலுள்ள 11ம் கட்டையில் நேற்று இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருதீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இவ்வீதியால் வந்த இராணுவ வாகனம் மீது தீவிரவாதிகள் கைக்குண்டுகளை எறிந்ததாகவும் இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இந்தத் தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என்றும் அரசு அறிவித்துள்ளது.

## செட்டிகுளத்தில் புதிய இராணுவமுகாம்

(கொழும்பு)

வவுனியா செட்டிகுளம்பகுதியில் புதிய இராணுவ முகாம் ஒன்று அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பகுதி மக்களின் நன்மை கருதியே இம்முகாம் அமைக்கப்பட்டதாக இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டபோதிலும்; இம்முகாம் அமைக்கப்பட்ட பின்னர் இப்பகுதி மக்கள் தினமும் பெரும் தொல்லைகளை அனுபவித்து வருவதாகப் புகார் செய்யப்படுகிறது.

இடம்பெயர்ந்த அரச—கூட்டுத்தாபன ஊழியர்———

## திருகோணமலை,வவுனியாவில் திங்கள் முதல் கடமையாற்றவேண்டும்

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை, வவுனியா மாவட்டங்களில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக இடம் பெயர்ந்து யாழ்ப்பாணம் வந்துள்ள அரச-கூட்டுத்தாபன ஊழியர்கள், இன்று வெள்ளிக்கிழமை மட்டும் யாழ்ப்பாணத்தில் கையெழுத்திட வேண்டுமென்றும் இம்மாதம் 14ம்திகதி திங்கட்கிழமை முதல்: முன்னர் கடமையாற்றிய இடங்களிலிருக்கவேண்டுமென்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது;

அரசாங்கத்தின் இந்த அறிவுறுத்தல் குறித்து, பாதிக்கப்

(11-ம் பக்கம் பார்க்க)

கிளிநொச்சி

## பொலிஸ் - இராணுவ முகாம் விஸ்தரிப்பு; கண்டி வீதியில் வீதித் தடை, சந்தை, பஸ்நிலையம் இடமாற்றம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொலிஸ்-இராணுவ கூட்டு முகாம். விரைவில் விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும், சில தினங்களில் சுமார் கால் மைல்தூர வீதித் தடை கண்டி வீதியில் அமுலுக்கு வரவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது

அதேவேளை தடைசெய்யப்படும் வீதிக்குப் பதிலாகப் புதிய வீதி ஒன்று நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பின்புறமாக அமைக்கப்படவிருக்கிறது;

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் அமைச்சராக இருந்த திரு. எஸ். குமாரசூரியரால் கட்டப்பட்டு இன்றுவரை திறக்கப்படாது இருந்துவரும் புதிய சந்தைக் கட்டிடம் ஊடாகச் செல்லும் இந்தப் புதிய வீதி கிளிநொச்சி மாவட்ட அரச செயலகத்தின் பின்புறமாகச் சென்று கண்டி வீதியை இணைக்கவுள்ளது;

புதிய வீதியின் அமைப்பு வேலைகள் கடந்த 8ம் திகதி செவ்வாய்க்கிழமை நீர்ப்பாசனத் திணைக்களத்தாலும், மாவட்டச் செயலகத்தாலும் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

கொழும்பிலிருந்து உயர் இராணுவ இணைப்பதிகாரி ஒருவர் ஹெலிகொப்டரில் கிளிநொச்சிக்குத் திடீர் விஜயம் ஒன்றினை மேற்கொண்டு அர

(11ம் பக்கம் பார்க்க)

## பேராதனை செல்லும் மாணவர் கவனத்துக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து பேராதனைப் பல்கலைக் கழகத்துக்கு நாளை மறுதினம் 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை செல்லவிருக்கும் புதிய மாணவர்களுக்கான சகலவசதிகளும் செய்யப்பட்டுள்ளதாக மாணவர்களின் பிரதிநிதி ஒருவர் நேற்று

(11-ம் பக்கம் பார்க்க)

# "சுயநலவாதிகளின் உயர்ச்சிக்கு நீங்கள் உரமாகிறீர்கள்!" ஆயுதபடையினருக்கு 'புலிகள்' கடிதம்

(யாழ்ப்பாணம்)

"உங்கள் இனத்திலிருந்து ஒதுக்கிவைக்கப்பட்டுள்ள பாட்டாளி வர்க்கத்துடன் நீங்களும் ஒன்று சேர்ந்து அரசுக்கெதிராகப் போரிடும்போது தான் நீங்களும் நாமும் ஒன்றாகப் போடு பேசிக்கொள்ளமுடியும். நீங்கள் அவ்வாறு போரிடும் போதுதான் எங்களது இலட்சியமும் உங்களுக்குப்புரியும்."

"தமிழீழ விடுதலைப் புலிகள்" இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரன், 'ஸ்ரீலங்கா ஆயுதப் படையினருக்கு:...' என்ற தலைப்பிட்டு அனுப்பி வைத்த கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

"தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்" பொறிக்கப்பட்டு இலச்சினைத்தில் அச்சிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அக்கடிதத்தின் பிரதி பத்திரிகைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது:

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"ஸ்ரீலங்கா ஆயுதப் படை

(11-ம் பக்கம் பார்க்க)

# அ௫ளம்பரம்

## தேவை

விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கும் றப்பர் கலந்த தும்பு மெத்தை தயாரிக்கும் தொழிற்சாலைக்கு தொழில் நுட்ப யந்திரசாதன அனுபவமுள்ள முகாமையாளர் தேவை. விபரங்கட்கு: நம் புத் தொழிற்சாலை, பூநகரி 1143

திற்றண்டி, மட்டன்றோல், கட்லட், சுவிற்ஸ் போன்றவை தயாரிக்க நல்ல அனுபவமுள்ள ஆள் தேவை. நேரில் வரவும். ரவர், கோப்பி இன்ட் கஃபார், யாழ்ப்பாணம். 1149

மாம்பழம், விளாம்பழம், தென்னிக் கனிவகைகள் மொத்தமாக வாங்கப்படும். விபரங்களுக்கு: அரஸ்கோ இன்டஸ்றியல் லிமிட்டட், மாவிட்டபுரம். 1167

கிரைண்டிங் மில்லில் அனுபவமுள்ள டிரைவர்கள் தேவை நேரில் வரவும். Manju Grinding Mill. Puliankoodal Junction, Kayts. 1174

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல விருந்துபசார விடுதி. மதுபானச்சாலைக்கு (Restaurant and Bar) நடத்தவயதுள்ள பராமரிப்பாளர் உடன் தேவை. உணவு, விடுதிவசதியும் உண்டு விண்ணப்பிக்கவும் 16, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். 1184

## விற்பனைக்கு

சுன்னாகம் மின்சார சபையின் தென்புறமுள்ள தெரிசிட்டிக் காணியின் இரண்டாம் பங்கு. லொறிப்பாதையுள்ள தோட்டக் காணியில் மேற்குப் புறமாக அல்லது கிழக்குப் புறமாக 10 பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு Dr S சந்திரசேகரா கோப்பாய் சந்தி கோப்பாய் எனும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். 1169

புதிய யன்னல் நிலைகள் (6'X4'), கதவு நிலைகள் (3'-2'X8') ஆகியன சகாய விலைகளில் விற்பனை. தற்போது வீடு கட்டுவோருக்கு ஒரு சிறந்த வாய்ப்பு. தொடர்பு கொள்: விளம்பரதாரர் M 24, மே/பா, Dyn ads. 476 பிரதான வீதி, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம். 1183

தட்டச்சு இயந்திரம் -றேமிங்ரன் போட்டபிள் இங்கிலாந்து ரூ 1250/-, சிங்கர் மெஷின் (கை-கால்) இங்கிலாந்து ரூ. 2750/-, ஒலிம்பஸ் கமரா ரூ 1250/-. மாலை 3 - 6 மணிவரை. ஸ்ரீதரராசா, கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை. 1185

ஒருமாத கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தேவைப்படுவோர் உடன் தொடர்பு கொள்ளவும். நடராசா ஸ்ரீதரன், யாழ். ரோட், வல்வெட்டித்துறை. 1187

### பயிற்சிகள்

செய்முறை பயிற்சியுடன் ஓட்டோ வயறிங் எலக்றிக்கல் வயறிங், டிராவ்ட்மென்ஷிப் பயிற்சிகள் 10 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு குறுகிய கால குறைந்த கட்டணத்துடன் 14-10-85 ஆரம்பமாகின்றன. இன்ஸ்டிரியூட் ஒவ் எஞ்ஜினியறிங் ரெக்னொலொஜி, 11 B, ஸ்ரான்லிறோட், யாழ்ப்பாணம். 1148

## வகுப்புகள்

பகல்நேர வகுப்புகள் O/L A/L விஞ்ஞானம் Bio and Maths) Stenography (Short - Hand, Typing மருத்துவ தாதிப் பயிற்சி (Nurses Diploma Training Course), National Certificate in English Exam. Course. 30-10-85 முன் நேரில் விண்ணப்பிக்கவும். அதிபர், உயர்கல்விக் கல்லூரி, ஆனைப்பந்தி. யாழ்ப்பாணம். 1180

மூன்றுவருட ஆங்கில மொழி மூலம் மருத்துவ தாதிப்பயிற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் சில மாணவர்களுக்கு அனுமதி கொடுக்கப்படும். பலரின் வேண்டுகோளின்படி வேலை செய்பவர்களுக்காக மாலை நேர (2-00 5-00) வகுப்பு ஆரம்பிக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. நேரில் வந்து விண்ணப்பிக்கவும். அதிபர், உயர்கல்விக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 1179

## தவறிவிட்டது

கணபதிப்பிள்ளை யோகேஸ்வரன், அராலி மேற்கு றோட், வட்டுக்கோட்டை என்பவருடைய அடையாள அட்டை 7-10-85-ல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 1176

## சேவை

அழகிய கிருஷ்ணர் ஸ்ரிக்கரை 2 பார் சோப் அல்லது 2 சுப்ப மிக்கவைற் மேலுறைகளை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். மிக்கவைற், யாழ்ப்பாணம். 1134

அரிச்சுவடி ஏடுகள்: விஜயதசமி தினத்தன்று வித்தியாரம்பம்செய்யும் கிழக்கு மாகாண பாடசாலைகள், தொண்டர் சபைகள் அரிச்சுவடி ஏடுகளை மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிசனில் விண்ணப்பம் செய்து பெற்றுக்கொள்ளலாம். மிக்கவைற், யாழ்ப்பாணம். 1177

### பயிற்சி

வார இறுதி வகுப்புகள் G S. Q (Bio) B.Sc (Bio) பாலர் பயிற்சி டிப்ளோமா (Montessori Diploma) மனையியல் டிப்ளோமா (Home Science Diploma (C. E I. Part I and Part II (Lond), Draughtsmanship, Quantity Surveying 30 10-85 முன் நேரில் வந்து விண்ணப்பிக்கவும். அதிபர், உயர்கல்விக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 1181

### கல்வி

உயர்கல்விப் பதிப்பக வெளியீடுகள் G C E. (O/L) பரீட்சையில் திறமைச்சித்தி பெற உதவும் 5 வருட கடந்தகால வினாக்களும் விடைகளும் 10 பாடங்களில் கிடைக்குமிடங்கள்:- ஸ்ரீலங்கா, பூபாலசிங்கம், ஸ்ரீ சுப்பிரமணியம், மலிங்கள், சாரதா, ரகுநாதன், பஸ்ரியன் புத்தகசாலைகள். ஒவ்வொன்றும் ரூபா 17/50. 1152

## தொண்டர் ஸ்தாபனங்கள்

# வேற்றுமை பாராட்டாமல் பணியாற்ற வேண்டும்

(யாழ்ப்பாணம்)

"தொண்டர் ஸ்தாபனங்கள் அந்தந்த அமைப்பு ரீதியாக மத வேற்றுமை பாராது நல்ல மனப்பான்மையுடன் தொண்டாற்றுதல் வேண்டும். இந்துவா சைவமா என்ற பிரச்னையை உணர்வ ரீதியில் தீர்த்துக் கொள்ள வேண்டியது அறிஞர்களே."

இவ்வாறு நல்லை ஆதீனகலா மண்டபத்தில் நடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தொண்டர் சேவைநல பாராட்டுவிழா வைபவத்தில் யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவர் திரு. இ. சி. சண்முகலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ் மாநரசபை விசேட ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் நல்லூர் திருவிழாவின்போது முதலுதவிப்பிரிவில் பணியாற்றிய 50 மாணவிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார். திரு சிவராசா தொண்டர் சேவையில் பணிபுரிந்த 150 அங்கத்தவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார்.

நல்லை ஆதீன முதல்வர் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில் எமது சமயத்தி பகுப்பில் எதற்கெடுத்தாலும் போட்டி பொறாமை அதனை கேவலமான முறையில் துண்டுப் பிரசுரம் எச்சமயத்திலும் இல்லாத இந்நிலை களைந்தெறியப்பட்டு தொண்டு நிலையிலிருந்து படிப்படியாக சமய அறிவில் முதிர்ச்சிபெற வேண்டுமெனக்குறிப்பிட்ட அவர் நல்லை ஆதீனத்தின் சேவையையும் பாராட்டினார்.

திரு. சிவஞானம் பேசுகையில் தொண்டு செய்யப்புறப்பட்ட நாம் போட்டி பூசல்களின்றி எம்மை வருத்தும் சக்திகளையும் சமாளித்து மனப்பக்குவத்துடன் சமய வளர்ச்சியில் அயராது உழைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

ஆதின முதல்வர் மன்ற அமைப்பாளர் திரு இ சுவாமிநாதனின் சேவையைப் பாராட்டியதோடு அவருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

திரு. எம். சிவராசா, திருமதி வசந்தா வைத்தியநாதன் உட்பட பலர் தொண்டர் சேவையின் சிறப்புப்பற்றியும், சமய அறிவின் வளர்ச்சி பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். (ச)

### புத்தூரில் விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

புத்தூர் ஸ்ரீ குமரகுருபரன் விளையாட்டுக் கழக இல்லங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

புத்தூர் கழகமைதானத்தில் போட்டிகள் நடைபெறும். இதற்கான ஒழுங்குகளை யாழ் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த திரு. முத்துசிவதாசன் கவனித்துவருகிறார்.

### சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம் (வரையறுக்கப்பட்ட) சுன்னாகம்

## அறிவித்தல்

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 4,000க்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகளும், கழிவு சீனியும், கழிவு மாவும் கேள்விப் பத்திரம் மூலம் விற்பனைக்கிருக்கின்றன.

வெற்றுச் சாக்குகளுக்கு ரூபா 250/-ம், ஏனையவற்றுக்கு ரூபா 50/-ம் மீளளிப்பு வைப்புப்பணமாகச் சங்கத்தில் செலுத்தி சங்க வேலை நாட்களில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் 18-10-85 வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

பொதுமுகாமையாளர்

சுன்னாகம் பல நோ.<br>கூ. சங்கம்,<br>சுன்னாகம்,<br>09-10-85. 1182

## முதலாவது பிறந்ததின வைபவம்

### செல்வி நாகதாரணி சிவகுமாரன்

கொக்குவில் மேற்கு 45, பூணுநி லேனில் இருக்கும் திரு. க. சிவகுமாரன் புஷ்பராணி தம்பதிகளின் செல்வப் புதல்வியும் செ. கார்த்திகேசு தம்பதிகளின் அருமைப் பேர்த்தியுமானகுழந்தை நாகதாரணி தனதுமுதலாவது பிறந்தினத்தை (நாளை) 12-10 85 சனிக்கிழமை தனது இல்லத்தில் விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை இவரின் பெற்றோர், பேரன்மார், பேத்திமார், பூட்டி, சித்தப்பா, சித்திமார் மாமன்மார், மாமிமார், உறவினர்கள், நண்பர்களும் சீரும் சிறப்புடனும் ஆரோக்கியத்துடனும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறார்கள். 1159)

## (01) CITY & GUILDS London Exam., 1986

ELECTRICAL ENGINEERING TECHNICIAN'S Part II (POWER and ELECTRONIC)

துரிதவகுப்புகள் 14-10-1985 காலை 8-00 தேர்வுமுறையில் தெரிவு செய்யப்பட்டு பயிற்றப்படுவர்.

தகுதி: G. C. E. (O/L) / தொழில்நுட்ப மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

## (02) தொழில் முறைக்கல்வி

(a) INDUSTRIAL WIRING
(b) RADIO and TELEVISION TECHNICS
(c) GENERATOR, MOTOR, TRANSFORMER, WINDING
(d) AIR CONDITIONING and REFRIGIRATION

மேற்குறிப்பிட்ட தொழிற்பயிற்சி நெறிகளுக்கு செய்முறைப் பயிற்சி மூலம் கற்பிக்கப்படும். திறமையாகச் சித்தியெய்தும் 20 மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றுக்கொடுக்கப்படும்.

ஆரம்பம்: 14-10-1985

விபரங்கட்கு:

AUTO COOL ENGINEERS

(சாந்தி சினிமாவுக்கு அருகாமையில்)<br>யாழ்ப்பாணம். 1171

## 31-ம் நாள் நினைவஞ்சலி

### அழைப்பு

ஸ்ரீமான் நா. ஆ. கார்த்திகேயபிள்ளை



எங்குலமுதல்வன் வேலணையூர் ஓய்வு பெற்ற கிராமசபை விதானை ஸ்ரீமான் நா. ஆ. கார்த்திகேயபிள்ளை அவர்கள் 13-9-85 இல் சிவபதம் சேர்ந்தது குறித்த அந்தியேட்டி 12-10-85 சனிக்கிழமை காலை 8 மணியளவில் வேலணை வெள்ளைக் கடற்கரையிலும், சபிண்டீகரணம் 13-10-85 ஞாயிறு காலை 10 மணியளவில் மேலைக்கரம் பொன்னிலும் நிகழும்.

தயவுகூர்ந்து தாங்கள் இந்நிகழ்ச்சிக்கு சமூகமளித்து அன்னாரின் ஆன்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்குமாறு வேண்டுகின்றோம் உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வழைப்பினை ஏற்றுக் கொள்ளவும்.

மனைவி, மக்கள், மருமக்கள், சகோதரர், பேரர்.

மேலைக்கரம்பொன், ஊர்காவற்றுறை. [1170]

## கப்பல் பணய 'நாடகம்' முடிந்தது: அனைவரும் விடுதலை—

# ஒரு அமெரிக்கப் பயணி மட்டும் கொல்லப்பட்டு கடலில் வீசப்பட்டார்!

## வெள்ளைமாளிகை அறிவிப்பு! கப்பல் காப்டனும் ஊர்ஜிதம்!!

கெய்ரோ, அக். 10

இத்தாலிய உல்லாசக் கப்பலான 'அக்கேலே எலாரோ'வின் சிப்பந்திகள் உட்பட 450 பயணிகளும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். ஆயினும் ஒரேயொரு அமெரிக்கப் பயணிமட்டும் கொலை செய்யப்பட்டுள்ளதாக 'வெள்ளை மாளிகை' அறிவித்துள்ளது. இதனை அக்கப்பலின் காப்டனும் ஊர்ஜிதம் செய்துள்ளார்.

'அக்கேலே எலரோ' அது கடத்தப்பட்ட இடத்திலேயே நேற்று மீண்டும் கொண்டு வரப்பட்டு நங்கூரமிடப்பட்டது. இதையடுத்து அதிலிருந்த அனைத்துப் பயணிகளும் கடத்தல்காரர்களால் விடுதலை செய்யப்பட்டனர்.

பாலஸ்தீன விடுதலை இயக்கப் பேச்சாளர்களும், செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்களும் கப்பலினுள் சென்று கடத்தல்காரர்களுடன் பேச்சு நடத்தினர்.

ஐந்து பாலஸ்தீன கடத்தல்காரர்கள் இக்கடத்தலை மேற்கொண்டனர். அவர்களிடம் துப்பாக்கிகளும் வெடிமருந்துகளும் காணப்பட்டனர்.

கடத்தல்காரர்கள் பயணிகளை விடுவித்து தாம்சரணடைவதற்கு முன்னர் மூன்று நிபந்தனைகளை விடுவித்திருந்தனர். எகிப்தில் தாம் தண்டிக்கப்படக்கூடாதெனவும், எகிப்துக்கு வெளியே தமது பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்கப்பட வேண்டுமெனவும், பி. எல். ஓ இயக்கத்திடம் தாம் கையளிக்கப்படலாகாதெனவும் அந்நிபந்தனைகளில் குறிப்பிட்டிருந்தனர்.

பயணிகள் விடுதலையானதும் கடத்தல்காரர்கள் இமுவை' படகொன்றில் கொண்டு செல்லப்பட்டனர். தற்போது இவர்கள் இருக்குமிடம்பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. எகிப்தில் இராணுவ காவலில் இவர்கள் வைக்கப்பட்டுள்ளார்கள் என்றும், எகிப்தை விட்டு வெளியேறி விட்டார்கள் எனவும் முரண்பட்ட தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

இதேவேளை அக்கப்பலில் இருந்த அமெரிக்கப் பயணிகளில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் என்று வாஷிங்டனில் வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது. கப்பல் காப்டன் ஜெரோடா இத்தாலிய தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் இத்தகவல் உண்மையென்பதை ஊர்ஜிதப்படுத்தினார்.

தம்மிடம் கடத்தல்காரர்களில் ஒருவர் வந்து ஒரு அமெரிக்கப் பயணியைக் கொன்று விட்டதாகக் கூறியதாகவும், அவரது உடையில் இரத்தம் தோய்ந்திருந்ததெனவும் அவர் கூறினார். அத்துடன் அக்கடத்தல்காரர் தம்மைச் சந்திக்க முன்னர் கப்பலின் கீழ்த்தளத்தில் இயந்திரத் துப்பாக்கிப் பிரயோகம் கேட்டதாகவும் காப்டன் கூறினார்.

கொல்லப்பட்ட அமெரிக்கரின் சடலம் கப்பலிலிருந்து கடலினுள் வீசப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ)





## கப்பல் கடத்தல்காரர் மீது பி.எல்.ஓ. ஒழுங்குநடவடிக்கை

கெய்ரோ. அக். 10

இத்தாலிய உல்லாசக் கப்பலைக் கடத்தியவர்கள் மீது பாலஸ்தீன விடுதலை இயக்கம் ஒழுங்குநடவடிக்கை எடுக்கவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது!

இயக்கத் தலைவர் யாஸீர்அரபாத் இதற்கான உத்தரவை வழங்கியிருப்பதாகவும் கூறப்பட்டது. இந்த ஒழுங்கு நடவடிக்கைக்கு அஞ்சியே அந்த ஐந்து பாலஸ்தீன கப்பல் கடத்தல்காரர்களும் தாம் பி. எல். ஓ இயக்கத்திடம் கையளிக்கப்படக்கூடாதென நிபந்தனை விதித்திருந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை அக்கடத்தல்காரரின் உண்மையான நோக்கம் அந்த இத்தாலிய கப்பலைக் கடத்துவதல்ல எனவும் கூறப்பட்டது: அக்கப்பலில் ஏறிச் சென்று இஸ்ரேலிய கடல்பகுதியில் இறங்கி அங்கு குழப்பங்களை உண்டுபண்ணவே அவர்கள் திட்டமிட்டனராம். ஆனால் அவர்கள் தமதுமுடிவை பின்னர் மாற்றிக்கொண்டு அக்கப்பலைக் கடத்திச்செல்லவதென முடிவு செய்தனர் என்று கூறப்பட்டது.

இது இவ்வாறிருக்க பிரஸ்தாப கப்பல் பணய நாடகத்தின் போது அமெரிக்கர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் என்பது தெளிவாக நிரூபிக்கப்படும் பட்சத்தில் கடத்தல்காரர்களைத் தம்மிடம் ஒப்படைக்குப்படி இத்தாலிய அரசு எகிப்தைக் கேட்டுள்ளது. (இ)

### இந்திய பிரதம நீதியரசருக்கு——

## சர்வதேச வழக்கறிஞர் சங்க உயர் விருது!

புதுடில்லி, அக். 10

இந்தியப் பிரதம நீதியரசர் திரு. பி. என். பகவதிக்கு சர்வதேச வழக்கறிஞர் சங்கத்தின் உயர்விருது ஒன்று வழங்கப்பட்டுள்ளது: இந்திய ஜனாதிபதி ஜெயில்சிங் நீதியரசர் பகவதிக்கு நேற்று இவ்விருதை வழங்கினார்.

எளியோருக்கான சட்ட உதவித்துறையில் திரு. பகவதி ஆற்றிய சேவையைக் கௌரவித்தே அவருக்கு இவ்விருது வழங்கப்பட்டது.

ஜனாதிபதி ஜெயில்சிங் இவ்விருது வழங்கும் வைபவத்தில் பேசியதாவது: 'இந்த உயர்விருது இந்தியாவுக்குப் பெருமை யளிப்பதாகவுள்ளது. நீதித்துறையில் சுதந்திரமாக இயங்கும் பட்சத்திலேயே ஜனநாயகம் பிழைக்க முடியும்.

மாறிவரும் சமூக அமைப்பின் தேவைகளுக்கேற்ப நீதிச் சட்டங்கள் திருத்தியமைக்கப்படவேண்டும். அத்துடன் செலவில்லாத விரைவான நீதி அனைவருக்கும் கிடைக்க வேண்டும்' என்றார்.

திரு பி. என். பகவதி இரு மாதங்களுக்கு முன்னரே இந்தியாவின் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டார். (இ)

## முன்னாள் மாணவரின் முன்மாதிரி

(நயினாதீவு)

நயினாதீவு மகாவித்தியாலய விஞ்ஞான ஆய்வுகூட அபிவிருத்திக்கென இப்பாடசாலை முன்னைள் மாணவரும், பாடசாலையின் நலன் விரும்பியுமான பேராசிரியர் வி இராமச்சந்திரன் 20,000 ரூபாவை நன்கொடையாக வழங்க முன் வந்துள்ளார். இதற்கான உறுதி மொழியை பாடசாலை அதிபர் திரு. நா. க. சண்முகநாதபிள்ளை யிடம் தெரிவித்துள்ளார்.

## கைதடி இளைஞர் வட்டம்

(யாழ்ப்பாணம்)

''இளைஞர்கள்தான் உலகின் மாபெரும் சக்தி. இதனை இன்று நம் நாட்டிலும் காண்கிறோம். இன்றைய நெருக்கடியான நிலையில் இளைஞர்களை ஒன்று திரட்டுகின்ற அமைப்புக்கள் தேவை. ஒன்று திரட்டுகின்ற இளைஞர்களுக்கு முதலில் நற்போதனைகளை வழங்க வேண்டும். எனவேதான் இப் பகுதியிலும் இளைஞர் வட்டம் அமைக்கப்பட்டுள்ளது'' என்று கைதடியில் அண்மையில் ஆரம்பம் செய்து வைக்கப்பட்ட இளைஞர் வட்டக்கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் திரு: ப. செல்லத்துரை குறிப்பிட்டார். மேலும் பலர் இங்கு உரை நிகழ்த்தினர்.

இறுதியில் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர்: என். கே. துரைசிங்கம், உபதலைவர் திரு: இ. பவகாந்தன், செயலாளர் திரு: சி. ஜெயதிராஜா. உபசெயலர்: திரு இ. இதிதரன், பொருளாளர்: திரு. க. சிறிகரன், செயற்குழு உறுப்பினர்களாக எண்மர் தெரிவுசெய்யப்பட்டனர். ஜ

## பண்ணிசைக் கச்சேரி

(யாழ்ப்பாணம்)

நாவலர் சபை ஆதரவில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் இன்று 11ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5-30 முதல் திரு. எஸ். கல்யாணசுந்தரம் அவர்களின் பண்ணிசைக்கச்சேரி நடைபெறும்.

## பண்ணிசை போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச இளைஞர் ஆண்டை யொட்டி யாழ். மாவட்டத்தில் நடைபெற்ற பண்ணிசைப் போட்டியில் யாழ். கல்வி வட்டாரப் பாடசாலைகள் பங்குகொண்டன. இப் போட்டிகள் யாழ் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. இ. ... தலைமையில் நடைபெற்றது. பண்ணிசைப் போட்டி முடிவுகள் பின்வருமாறு:

பாலர் பிரிவு - ஆண் - தனி: ந. ... நல்லூர் தெற்கு ஸ்ரீ ... வித்தியாலயம். பாலர் பிரிவு - பெண் - குழு: புனித பத்திரிசியார் ...

கீழ்ப்பிரிவு - பெண் - தனி: வே. அனுராதா, புனிதபரியோவான்.

மத்தியபிரிவு - ஆண் - தனி: கே. எஸ் குமாரதாஸ், பரியோவான்.

மத்தியபிரிவு - பெண் - தனி: பி ஷாந்தி வேம்படி மகளிர்.

மத்தியபிரிவு - ஆண் குழு: யாழ். மத்திய கல்லூரி.

மத்தியபிரிவு - பெண் - குழு: வேம்படி மகளிர்.

மேற்பிரிவு - ஆண் - தனி: ஜி. கிரிதரன் யாழ். மத்திய கல்லூரி.

மேற்பிரிவு - பெண் - தனி: ... துஷி வேம்படி மகளிர்.

மேற்பிரிவு - பெண் - குழு: வேம்படி மகளிர் (ஜ)

## முதலிடம்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறைக் கல்வி வட்டாரம் தமிழ் தினத்தையொட்டி நடாத்திய நாடகப் போட்டியில் வீமன்காமம் மகா வித்தியாலயம் இவ்வருடமும் முதலாமிடத்தைப் பெற்று மாவட்டப்போட்டியில் கலந்து கொள்வதற்குத் தகுதி பெற்றுள்ளது. மகாஜனக் கல்லூரி இரண்டாம் இடத்தையும், இளவாலை ஹென்றி அரசர் கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றன.

### நெல்லை மாவட்டத்தில்——

# வீட்டில்குண்டு வெடித்ததில் 6 பேர் மரணம்!

சென்னை, அக். 10

நேற்று நெல்லை மாவட்டத்திலுள்ள வீடொன்றில் குண்டொன்று வெடித்ததில் ஆறுபேர் கொல்லப்பட்டனர்!

திருநெல்வேலிக்கு அருகே புள்ள பனைகுடி என்னுமிடத்தில் துப்பாக்கிப் பயிற்சிக்கு உபயோகப்படுத்தும் சில குண்டுகளை அப்பகுதி கிராமவாசிகள் சேகரித்துள்ளனர். அவ்வாறு சேகரிக்கப்பட்டவற்றில் ஒன்றே வெடித்ததில் ஆறுபேர் கொல்லப்பட்டனர்.

அத்துடன் அவ்வீட்டின் ஒரு பகுதிக் கட்டடமும் இடிந்து வீழ்ந்தது. கிராம வாசிகளின் அறியாமையும், எச்சரிக்கையின்மையுமே இச்சேதங்களுக்கு முக்கிய காரணமென்று தெரிவிக்கப்பட்டது.

நெல்லை மாவட்டப் பொலிஸார் இச் சம்பவம்குறித்து புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ)

## இளவரசி டயானாவின் அச்சம்!

லண்டன், அக் 10.

தொலைக்காட்சிப் படக் காட்சிகள் குறித்து பிரிட்டனின் முடிக்குரிய இளவரசி டயானா கவலை தெரிவித்துள்ளார்

'தொலைக்காட்சிப் படங்களில் போதைவஸ்து, மற்றும் வன்முறைகள் குறித்த காட்சிகள் அடிக்கடி இடம்பெறுகின்றன இதனால் எனது குழந்தைகள் அவற்றைப் பார்ப்பதன்மூலம் பாதிக்கப்படலாம் என அஞ்சுகிறேன்'' என்று அவர் தெரிவித்தார்.

நேற்று அவர் வழங்கிய பேட்டியொன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். இளவரசி டயானா தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் வன்முறைக் காட்சிகளும் மற்றும் சமூகவிரோதக் காட்சிகளும் பெருமளவு காட்டுவது குறித்தே இந்த அச்சத்தை வெளியிட்டார்.

### மணிவாக்கு

எதிரதாக் காக்கும் அறிவினார்க்கில்லை
அதிர வருவதோர் நோய்.

— குறள்

# நமது நோக்கு

## அந்தச் சங்கொலி ஏறுமா?

இலங்கையில் தொடர்ந்து நடைபெற்று வரும் அரசியல் இனப்படுகொலைகளை சர்வதேச மன்னிப்புச்சபை மீண்டும் கண்டித்துள்ளது. அரசியல் கொலைகள் சித்திரவதைகள் மரண தண்டனைகள் எந்த நாடும் எந்த அரசும் மேற்கொள்ளக்கூடாது என்றும் இந்த ஸ்தாபனம் வற்புறுத்தியுள்ளது.

எந்தஒரு அரசாங்க, அரசியல் தத்துவ, அல்லது பொருளாதார, சமயக்குழுக்களுடனும் சம்பந்தப்படாத சுதந்திர அமைப்பான இந்த இயக்கம் இதற்கு முன்னரும் இவ்வாறான கருத்துக்களை வெளியிட்டுள்ள போதிலும் அதுபற்றி இலங்கை அரசு எதுவித அக்கறையும் காட்டிக்கொள்ளவில்லை. மாறாக இந்த சர்வதேச ஸ்தாபனத்தை ஒரு கம்யூனிஸ சார்பு அமைப்பு என களங்கப்படுத்தி அதன் கருத்துக்களை ஒருதலைப்பட்சமானவை என மறைசாற்றவும் முயற்சி எடுக்கப்பட்டது.

சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கையில் நடக்கும் அரசியல், இனப்படுகொலைகளை மட்டுமல்ல, இது போன்ற ஏனைய பல நாடுகளிலும் இடம்பெறும் அட்டூழியச்செயல்களைக்கண்டித்தும் அம்பலப்படுத்தியும் வருகின்றது மனிதர்கள் தமது நம்பிக்கைகள், நிறம், பால், இன, மொழி, அல்லது மதத்தின் பேரால் தடுத்து வைக்கப்பட்டு கொடுமைப் படுத்தப்படுவதற்கு எதிராக இவ்வியக்கம் உலகளாவிய போராட்டத்தை நடத்திவருவதால் இலங்கையில் நடைபெறும் அரசியல், இனப்படுகொலைகள் பற்றியும் அடிக்கடி தன் கவனத்தைத் திருப்பிவருவது வியப்பல்ல.

கடந்த 1982-ம் ஆண்டு இவ்வியக்கத்தின் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்து இங்கு நிலவும் அரசியல் நிலைமைகளை ஆராய்ந்ததுடன், இங்கு நடைபெற்றுவரும் மனித உரிமைகள் மீறப்படுதலைத் தடுக்கவும் இனப்படுகொலைகளை நிறுத்தவும் பல பரிந்துரைகளை இலங்கை அரசுக்கு வழங்கியது. அவை அனைத்தும் செவிடன் காதில் ஊதிய சங்கு போலாகிவிட்டன.

தென்னாபிரிக்காவில் பெரும்பான்மை கறுப்பு இன மக்களை சிறுபான்மை வெள்ளையர்கள் ஜனநாயகத்தின் பேரால் கொடுமைப்படுத்துவது உலகறிந்த விடயம். இங்கே பெரும்பான்மையினர் தமது வாக்கு பலத்தால் சிறுபான்மையினரை சிறுமைப்படுத்துகிறார்கள். குறிப்பாக தமிழ் இனத்தவர்களுக்கென ஒரு பாரம்பரிய பிரதேசம் இருக்கும் போது, அங்கே அவர்கள் பெரும்பான்மையாக வாழும்போது அந்த இன விகித அமைப்பையே சீர்குலைக்கும் விதத்தில் குடியேற்றத் திட்டங்களைப் புகுத்துவதும், அதனை எதிர்ப்பவர்களை இனம்கண்டு பறைசாற்றிக் கொலைப்படுத்துவதும் இந்தநாட்டுக்கே உரிய அரசியல் பண்பாக மாறிவிட்டது.

மறைந்த டி. எஸ். சேனநாயக்கா காலத்திலிருந்து அடுத்தடுத்துப் பதவிக்கு வந்த அரசுகளின் இந்தப் போக்கின் விளைவாகவே இன்றைய சூழ்நிலை தோற்றியது என்பதை மூடி மறைத்துவிட முடியாது.

நீதியைக்கோரி நிற்கும் தமிழ் இன மக்களை தொடர்ச்சியான ராணுவ நெருப்புக்களினால் அடக்கிவிட நினைப்பது மடமை. உலகம் விழித்துக் கொண்டிருக்கிறது. இங்கே நடக்கும் அநீதிகளை உலக அமைப்புக்கள் அக்கறையுடன் கவனித்துக் கொண்டிருக்கின்றன என்பதற்கு சான்று பகர்வது சர்வதேச மன்னிப்புச் சபையின் கண்டனம்.

இங்கே உரிமைகோரி போராடுபவர்கள் யார்? இந்த மண் மாதாவின் புதல்வர்கள். தமக்கும் தம் இனத்துக்கும் அநீதியிழைக்கப்பட்டு விட்டது என்பதால் கொதிப்புற்று எழுந்தவர்கள் அவர்கள்.

இவர்களில் பலரை அரசு கைது செய்து காவலில் வைத்து விசாரணைகள் இன்றி கொடுமைப்படுத்துகின்றது. வெஞ்சிறையில் விசாரணையின்றி தவிக்கும் இவர்களே பெரும்பான்மை இனத்தவர்களாய் இருப்பின் இந்த அரசாங்கம் இவ்வளவு தூரம் கண்மூடித்தனமாக இருக்குமா?

விசாரணைகளின் வெளியாகும் செய்திகள், சிறைகளிலிருந்து தப்பிச்செல்பவர்கள் சொல்லும் தகவல்கள் சிறையின் கொடுமைகளை வெளிப்படுத்துகின்றன.

இது என்ன நாகரிக மக்கள் வாழும் நாடா? புத்த பெருமானின் புனித பாதம் பதிந்த புண்ணிய பூமியா இது? என்றெல்லாம் கேட்கத் தோன்றும் சமயங்கள்.

மட்டக்களப்பிலே, மன்னாரிலே, வவுனியாவிலே, திருநெல்வேலியிலே, திருக்கோணமலையிலே என்னாம் ஆயுதப்படையினர் நடத்துகின்ற விதங்களை அறியும் போது சிறைகளிலே நடக்கும் அக்கிரமங்களை மற்பனை செய்யவும் முடியாமலிருக்கின்றது.

இந்நிலையில் சர்வதேச மன்னிப்புச்சபை போன்ற சர்வதேச ஸ்தாபனங்கள் இன்னும் சற்று அதிகமாகவே அக்கறை எடுத்து இங்கு நடைபெறும் அட்டூழியங்களை நிறுத்த உதவ வேண்டும்.

## பண்பாட்டின் கருவூலம் பண்டிதர் செல்லத்துரை

[illegible]னவர் பணியே மகேசுவரன் பணியாய்க் கருதித் தமது கடமையினின்றும் இறைவனுடன் வழுவாது வாழ்ந்த செம்மல்கள் சென்ற பரம்பரை ஆசிரியர்கள். இவ்வாறு கூறுவது மிகைபடக்கூறல் போலத் தோன்றலாம். ஆனால் இது 'உண்மை'; வெறும் புகழ்ச்சி அல்ல. இந்தப் பரம்பரையில் எடுத்துக்காட்டாய் விளங்கி 11-09-85ல் மறைந்தவர்தாம் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் பண்டிதர் க. செல்லத்துரை B.A (Lond) அவர்கள்.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாகப் பல்லாயிரக் கணக்கான மாணவர்களுக்குத் தமிழும் ஆங்கிலமும் கற்பித்து உயர்தரக் கல்விக்கு அவர்களை ஆயத்தம் செய்தவர் பண்டிதர். பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், உயர் நிர்வாக அதிகாரிகள், நியாயவாதிகள் முதலாக இவரின் மாணவ பரம்பரை நீண்டு செல்லும் ஒன்றாகும். அவர்களின் நெஞ்சங்களில் ஒருபொழுதேனும் பண்டிதருக்கான ஒதுக்கப்பட்டு அவரை அங்கு குடியேற்றி நன்றியுடன் அவர்கள் நினைவு கூர்வர்.

தமது கடமையைத் தவிர வேறு எதிலுமே தோயாது ஒரு நிமிடத்தைக்கூட வீணாக்காத பெருமை இவருக்குண்டு. தமிழ், சைவம், ஆங்கிலம், லத்தீன் ஆகிய நான்கு பாடங்களிலும் பண்டிதர் துறைபோனவர் தமக்குத் தெரிந்தவற்றை அழுத்தந்திருத்தமாகவும் அநாவசியமான வளர்த்தலின்றித் தெளிவாகவும் விளக்கவல்லவராக இவர் விளங்கினார். ஐயம், திரிபு ஆகிய மயக்கங்களுக்குப் பண்டிதரின் கல்வியிலும் கற்பித்தலிலும் இடமேயில்லை. என்போன்ற இளம் ஆசிரியர்களுக்கு (அக்காலத்தில்) வழிகாட்டுப் கலங்கரை விளக்கமாகத் துலங்கியவர் இப்பெருந்தகை.

கல்லூரி தொடங்கும் நேரம் காலை 8 30 ஆக இருந்தது. ஆனால் பண்டிதரோ சரியாக காலை 7 30 மணிக்கு வந்துவிடுவார்: வட்டுக்கோட்டையிலிருந்து பஸ்ஸில் வந்திறங்கி நேரே பாடசாலைக்கு வருவது அவரின் வழக்கம் ஒருநாள்கூட இவ் வழக்கத்திலிருந்து இவர் மாறியது கிடையாது தத்துவஞானியான இம்மானுவல் கான்ற் மாலையில் உலாவப் போகும் நேரத்தைக் கவனித்து அக்காலத்தவர் தமது கடிகார நேரத்தைச் சரிசெய்து கொள்வார்களாம். பண்டிதரின் வருகையை நோக்கி எத்தனைபேர் நேரக்கணிப்புச் செய்திருப்பார்களோ? நாம் அறியோம்!

அகில இலங்கையிலும் பெயர்பெற்ற கல்லூரிகளுள் ஒன்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி என்பதைச் சொல்லித்தான் தெரியவேண்டுமென் பதில்லை. பலதுறை அறிஞர்கள், பலதுறைத் திறமையானவர்கள் சிறந்த நிர்வாகிகள் அஞ்சா நெஞ்சங்கொண்ட வணங்காமுடிகள் எத்தனையோபேர் இங்கு அதிபர்களையும் ஆசிரியர்களையும் அணி பரிந்து வரலாறு சமைத்திருக்கின்றனர். ஆனால் கற்பித்தல் ஒன்றையே உயிர் மூச்சாகக் கொண்டு தமது சேவைக் காலத்தில் அரைநாள் லீவுகட்டும் பெற்று தமது பணியை நடத்திச்சென்றவர் வரிசையிலே நான் அறிந்தவரையில் பண்டிதர் க. செல்லத்துரை அவர்களுக்கு ஈடாக இந்துக் கல்லூரி மட்டுமல்ல இலங்கையிலேயே ஒருவரைக் காணுதல் இயலாத காரியம்!

இத்தகைய பெரியாரின் இழப்பினால் கவலையுற்றிருக்கும் அவர்தம் பாரியாருக்கும் ஏக புதல்விக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைச் செலுத்துவதோடு இவர் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுவோம்.

— சொக்கன் —

### வெள்ளிச்சிந்தனை

## சைவ சமயிகளே!

யாழ்ப்பாணத்திலுள்ள சைவ சமயிகளே, உங்களிடத்திலே அன்பு மிகுதியினாலே நாம் சொல்பவைகளைக் கேளுங்கள்.

நீங்கள் சிவதீட்சை பெற்றும் என்னே! விபூதி உருத்திராக்ஷதாரணம் பஞ்சாட்சர செபம் சிவாலய தரிசனம் செய்தும் என்னே! அந்தியேட்டி சிரார்த்த முதலியவைகளைச் செய்தும் என்னே......... ஊர்தோறும் கோயில்கட்டுவித்துப் பூசை திருவிழாக்கள் செய்வித்தும் என்னே! சிவராத்திரி கந்தசட்டி கார்த்திகை சுக்கிர வார முதலிய விரதங்களிலும் அன்னப்பிரதனை ஒழித்தினாலும் உடம்பை வருத்தியும் என்னே! நீங்கள் உங்கள் சமயக்கடவுளாகிய சிவபெருமானுடைய இலக்கணங்களையும் உங்கள் ஆன்மாவின் இலக்கணங்களையும் ஆன்மாவைப் பந்தித்த பந்தத்தின் இலக்கணங்களையும் புண்ணிய பாவங்களையும் அவற்றின் பயனாகிய சுவர்க்க நரகங்களையும் சிவபெருமானை வழிபடும்முறைமையையும் ... கிரமமாகப் படித்தாயினும் கேட்டாயினும் அறிகிறீர்களில்லை. உங்கள் பிள்ளைகளுக்கு இவைகளைப் படிப்பிக்கிறீர்களில்லை. உங்கள் கோயில்களிலே சிவபக்தர்கள் ஓதவாகிய தேவார திருவாசகப்பாராயணம் சைவ சமயப்பிரசங்கம் முதலிய நற்கருமங்களைச் செய்விக்கிறீர்களில்லை!

— நாவலர்

## உங்கள் மரக்கறி விதைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்

மரக்கறிச் செய்கையாளர்கட்கு இதுவரை காலமும் கமத்தொழில் திணைக்களமே விதைகளை விற்பனை செய்து வந்துள்ளது. ஆனால் இந்த வருடத்தில் இருந்து மேல் நாட்டு மரக்கறி விதைகளை (அவரை பூக்கோவா, பீட்றூட், கரட், முள்ளங்கி, கறிமிளகாய், பம்பாய் வெங்காயம் போன்றன) கமத்தொழில் திணைக்களம் விநியோகம் செய்வதை நிறுத்தியுள்ளது இவற்றை இறக்குமதி செய்து விநியோகம் செய்வதற்கு அரசாங்கம் தனியார்துறையினர்க்கு இறக்குமதி அனுமதி வழங்கியுள்ளது. இவ்வனுமதிபெற்ற மரக்கறி விதை இறக்குமதியாளர்களின் விநியோகஸ்தர்களாக தனிப்பட்ட வியாபாரிகளும், கமநலச்சேவை உதவி ஆணையாளரின் கீழ் இயங்கும் கமநலச்சேவை நிலையங்களும் செயற்பட்டு கமக்காரர்களுக்கு வேண்டிய மேல்நாட்டு மரக்கறி விதைகளை விற்பனை செய்யும் முறை தற்போது நடைமுறையில் உள்ளது. ஆகவே இவ்விதைகளைக் கமக்காரர்கள் கமத்தொழில் திணைக்களத்தில் இருந்து (விவசாயப் போதனாசிரியர்கள் ஊடாக) இனிமேல் எதிர்பார்க்கமுடியாது.

### நிலைமையைச் சமாளிக்க

உள்நாட்டு மரக்கறி விதைகளைத் கமத்தொழில் திணைக்களமே தொடர்ந்தும் உற்பத்தி செய்து விநியோகம் செய்யும். ஆனால் யாழ். மாவட்டத்தில் அண்மைக் காலங்களில் நிலவும் போக்குவரத்துப் பிரச்னை காரணமாகவும், எம்மிடம் வாகனவசதிகள் இல்லாமையாலும் இவ்விதைகளைப் பேராதனையில் இருந்து எடுத்து வரமுடியாமல் உள்ளது. இந்த நிலைமையைச் சமாளிக்க நாம் சில நடவடிக்கைகளை ஏற்கனவே எடுத்துள்ளோம்: கடந்த சிறுபோகத்தில் எமது மாவட்டத்தில் பரவலாக எங்கும் பல மரக்கறி உற்பத்தியாளர்களைத் தெரிவுசெய்து அவர்களுக்குச் சிறிய அளவில் அடிப்படை விதைகளைப் பயிரிட்டு விதை உற்பத்தி செய்யப்பட்ட விதைகளைக் கமக்காரர்கள் பல்வேறு விவசாய சேவை நிலையங்களிலும் பெற்றுக்கொள்வதற்கு அவ்வப் பகுதி விவசாயப் போதனாசிரியர்களால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது இவ்வாறு உற்பத்து செய்யப்பட்ட விதைகளை சென்றபோகத்தில் பெரிதும் பயன்படுத்தப்பட்டன. இக்காலபோகத்திலும் விதை உற்பத்திக்காக மிளகாய், வெண்டி, கத்தரி, பாகல், புடோல், பயிற்றை, புசிற்றூவா ஆகியவற்றின் 'அடிப்படை' விதைகளைத் தெரிவுசெய்த விதைக் கமக்காரர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. உங்கள் பகுதி விவசாயப் போதனாசிரியர்கள் விவசாய விரிவாக்க சேவையாளர்கள் மூலமாக இவ்விதைக் கமக்காரர்களை அறிந்து தொடர்புகொண்டு உங்கள் மரக்கறி விதைத் தேவையைப் பூர்த்தி செய்யுங்கள்.

க கிருஷ்ணபிள்ளை.
உ. வி பணிப்பாளர்.

## உதவிக்கரம் நீளுகிறது

(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் யாழ். அகதிகள் முகாமுக்குத் தினமும் உணவுப் பொருட்களை வழங்கி வருகிறது.

அரியாலை, நல்லூர், யாழ் மக்களும், இப்பகுதிகளில் உள்ள பொதுஸ்தாபனங்களும் காலை, மாலை உணவுகளை அளித்து வருகின்றனர்.

இம்முகாம் ஆரம்பிக்கப்பட்ட இம்மாதம் 2-ம் திகதியிலிருந்து இதுவரை காலை, மாலை உணவுகள் முகாமில் தயாரிக்கப்படவில்லையாம்.

பொதுமக்களே தாராளமாக வழங்கி வருகின்றனராம். உணவு வகைகளை வாரி வழங்கி வருகிறவர்களுக்கும், ஏனைய உதவிகளைச் செய்கிற அனைவர்க்கும் 'ஈழநாடு' வாயிலாகத் தமது நன்றியினை இம்முகாம் பொறுப்பாளர் டாக்டர் பு. சிதரன் தெரிவிக்கிறார். (ஐ)

# ஏஜென்ஸியிடம் பணம் கட்டியவர் ஏமாற்றப்பட்டு தாக்கப்பட்டார்!

(யாழ்ப்பாணம்)
வெளிநாட்டு வேலைக்கென ஏஜென்சி ஒருவரிடம் பணம் கட்டியவர் அந்த ஏஜென்சியால் ஏமாற்றப்பட்டதோடு பலமாகவும் தாக்கப்பட்டு வீடு திரும்பியுள்ளார்.

மனைவியின் தாலிக்கொடி, நகைகளை விற்று வீட்டையும் அடைவைத்து பணத்தை ஏஜன்சியிடம் கட்டிவிட்டு கொழும்பில் பயணத்திற்காக காத்திருந்தவர் 2 மாதகாலமாகியும் அவர்கள் அனுப்பாது விடவே கட்டியபணத்தை திருப்பிக் கேட்டபோது தாக்கப்பட்டாராம்.

இச்சம்பவத்தினால் ஏமாற்றத்துடன் மனமுடைந்து தனது சொந்த ஊருக்குத் திரும்பியவர் காரைநகர் ஆலடியைச் சேர்ந்த கடற்றொழிலாளி ஒருவராவார். (ச)

## கசிப்பினால் அபிஷேகமும் எச்சரிக்கையும்

(மல்லாகம்)
கசிப்பு விற்பனை செய்து கொண்டிருந்தவரும், அதனைக் குடித்துக் கொண்டிருந்தவர்களும் கசிப்பினால் அபிஷேகம் செய்யப்பட்டு கசிப்பு வைத்திருந்த பரல்களைத் தலையில் சுமந்து கொண்டு ஊர்வலமாகச் சென்ற காட்சி மல்லாகத்தில் இடம்பெற்றது.

மல்லாகம் நீதிமன்ற வீதியில் வசித்துவரும் இராசேந்திரன் என்பவரே கசிப்பு விற்றுக் கொண்டிருந்தவராவார்.

இளைஞர் கோஷ்டியினால் பல தடவை எச்சரிக்கப்பட்டும் தொடர்ந்து கசிப்பு விற்பனையிலீடுபட்டிருந்தமையால் அத்தண்டனை வழங்கப்பட்டதாம். (மா)

## உரப்பசளை கருத்தரங்கு

(பூநகரி)
உரப்பசளைப் பிரயோகம் பற்றிய கருத்தரங்கு ஒன்று அண்மையில் உதவி அரசாங்க அதிபர் க. சபாபதிப்பிள்ளை தலைமையில் பூநகரி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்றது.

அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எஸ். பரமேஸ்வரநாதன், விவசாயப் போதனாசிரியர் திரு. கே. நல்லதம்பி, விவசாய பாடவிதான உத்தியோகத்தர் திரு. எஸ். விஜயமூர்த்தி உட்பட பலர் உரையாற்றினார்கள்.

இதனைத் தொடர்ந்து விவசாய அறிவுப் போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் முதலாவது பரிசை யோ. சந்திரசீலனும், இரண்டாவது பரிசை இ. குணசேகரனும், மூன்றாவது பரிசை சு. ரவீந்திரனும் பெற்றனர்.

## அமைதிவேண்டி பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)
கொழும்புத்துறை கிழக்கு சட்டம்பித்துறை ஸ்ரீ விசாகப் பெருமான் ஆலயத்தில் தமிழ்மக்களின் அமைதி வேண்டி யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை செயற்குழு உறுப்பினரும் கொழும்புத்துறை இந்து இளைஞர் மன்ற உபதலைவருமான திரு. எஸ். எஸ். வரதராசா தலைமையில் பஜனை, கூட்டுப்பிரார்த்தனைகள் நடைபெற்று வருகின்றன.

பிரதி வெள்ளி தோறும் நடைபெறும் இவ்வைபவத்தில் பாடசாலை மாணவ மாணவிகள் உட்பட அதிகமானோர் பங்குபற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (ச)

## இளைஞர் பலி

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு நாவற்குடா எனும் இடத்தில் நேற்று இளைஞர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

## அபிவிருத்திக்கழகம் அங்குரார்ப்பணம்

[யாழ்ப்பாணம்]
சதுமலை தெற்குப்பகுதி மக்களின் கல்வி, கலாசாரம், பொருளாதாரம், சமூகநலன் ஒழுங்கு ஆகியவற்றைப் பேணும் நோக்குடன் அப்பகுதியில் அபிவிருத்திக் கழகமொன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

பின்வருவோர் நிர்வாகிகளாக தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் நா. ஞானசம்பந்தன், உபதலைவர் நா. முத்துவிநாயகம், பொதுச் செயலாளர் ஐ. சாந்தன், உபசெயலாளர் அ. சரவணபவன், பொருளாளர் சு. ஆறுமுகம், உப பொருளாளர் ம. இராஜநாயகன், கல்விகலாசார குழுசெயலாளர் சி. அழகரத்தினம், அபிவிருத்தி உபகுழு செயலாளர் ச. சிவப்பிரகாசம் மற்றும் 11பேர் கொண்டசெயற்குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது. [ச]

## தபால் பார்சல் மூலம் மருந்து வந்தது

(பண்டத்தரிப்பு)
பண்டத்தரிப்பு அரசினர் கிராம வைத்தியசாலைக்கு விசர்நாய்க்கடிக்கு போடப்படும் ஏ. ஆர். வி. என்னும் தடுப்பு ஊசிமருந்து கொழும்பிலிருந்து தபால் பார்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் எஸ். கணேசலிங்கம் மேற்கொண்ட முயற்சியினால் இந்த தடுப்பு ஊசி மருந்துகள் கிடைத்துள்ளன. இதனால் இந்த இப்பகுதி மக்கள் யாழ். அரசினர் வைத்தியசாலைக்கு சென்று சிரமப்படாது இங்கேயே இலகுவாக இந்த ஊசி மருந்தை போடுவிக்கக் கூடியதாக இருக்கிறது.

## உடுபிடவைகள் வழங்கப்பட்டன

(நயினாதீவு)
திருகோணமலை, வவுனியா பகுதிகளிலிருந்து குடிபெயர்ந்து, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, நாவாந்துறை அகதிகள் முகாம்களில் தஞ்சமடைந்துள்ள தமிழ் அகதிகளுக்கு தமிழ் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் நயினாதீவு பொதுமக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட உடுபிடவைகள் வழங்கப்பட்டன.

## தையல் பயிற்சி நிலையம்

(புலோலி)
கிராம அபிவிருத்திச் சங்கங்களின் அனுசரணையுடன் புலோலி தெற்கில் தையல் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை புலோலி உப அலுவலக பொறுப்பாளர் நாகலிங்கம் அவர்கள் தனியார் கட்டிடமொன்றில் அமைவுபெற்ற இத்தையல் பயிற்சி நிலையத்தை எதிர்வரும் சனிக்கிழமை கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. ஆர். ஐயாத்துரை திறந்து வைக்கவுள்ளார்.

புலோலி தெற்கு கிராம சேவை அலுவலர் திரு வி. கே. சுகராசா, புலோலி பொதுசன நூலகர் திரு. எஸ். திருச்செல்வம், அதிபர் திரு. கே. வேணுகோபால் புலோலி ப. நோ. கூ. சங்க பொது முகாமையாளர் திரு. எஸ். அருணகிரி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்கின்றனர். இத்தையல் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறுவதற்கென 60 இளம் பெண்கள் நேர் முகப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## புதியகட்டிடத்தில் நூலகம்

(மானிப்பாய்)
மானிப்பாய் பட்டினசபையின் நூலகம் தற்போது புதிய தொகுகட்டடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பேர்ட் சமீபத்தில் திறந்து வைத்தார்.

இப் புதிய கட்டடத்தில் சிறப்பான வெளிச்ச வசதிகள் இருப்பதும் நல்லதொரு சூழலில் அமைந்திருப்பதும் சிறப்பான அம்சங்கள் ஆகும்.

## இனம் தெரியாத கோஷ்டியினரால் தாக்கப்பட்டார்

(கிளிநொச்சி)
உருத்திரபுரத்தில் கடை வைத்திருக்கும் இளம் வர்த்தகர் ஒருவர் இரவுவேளை இனம்தெரியாத கோஷ்டி ஒன்றினால் கோரமாக தாக்கப்பட்டு மயக்க நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த திங்கள் இரவு இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

தாக்குதலுக்காளாகி சிகிச்சை பெறுபவர் கா. ஜெயசீலன் (22 வயது) என்பவராவார்.

உழவு இயந்திரம் ஒன்றைத் தலைவருமாறு அழைத்த பிரஸ்தாப கோஷ்டியினர் வர்த்தகரை தாக்கி வீதியில் அநாதரவாக விட்டுச் சென்றதாகவும் பின்னர் உறவினர்கள் இவரை ஆஸ்பத்திரியில் சேர்த்ததாகவும் தெரியவந்தது.

## சுகாதார நிலையம்

(பண்டத்தரிப்பு)
பண்டத்தரிப்பு ஆரம்ப சுகாதார கவனிப்பு குழுவின் ஆதரவில் சுகாதார நிலையம் ஒன்று பண்டத்தரிப்பு புனித செபமாலைமாதா ஆலயத்திற்கு கருகாமையில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

## பூநகரியில் தென்னந்தும்பு தொழிற்சாலை

(பூநகரி)
தென்னந்தும்பு பதனிடும் தொழிற்சாலை ஒன்று அண்மையில் பூநகரிப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டதால் நூற்றுக்கணக்கான மக்கள் தொழில் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

பூநகரி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள செட்டியாகுறிச்சி நல்லூர், மட்டுவில்நாடு, கௌதாரிமுனை, நாச்சிக்குடா, என்ற ஐந்து கிராமங்கள் இணைந்து இந்த தென்னந்தும்புத் தொழிற்சாலை உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன.

இத் தொழிற்சாலைக்குரிய மூலப்பொருட்களான பொச்சுமட்டைகளை தண்ணீரில் போட்டு ஊறவைப்பதற்கான பாரிய கிடங்குகள் வெட்டப்பட்டுள்ளன. இக் கிடங்குகளில் 5 லட்சம் மட்டைகளை ஊறவைக்கமுடியுமாம். (ஐ)

## ஆயிரம் ரூபா கடனுதவி

(பண்டத்தரிப்பு)
கட்டுடை கிராம அபிவிருத்திச் சங்கம் காலபோக நெற்செய்கையில் ஈடுபடும் தனது சங்க உறுப்பினர்களுக்குத் தலா ஆயிரம் ரூபாவைக் கடனுதவியாக வழங்குவதென்று தீர்மானித்துள்ளது.

கடந்த வருடத்திற்கான கடன் பணத்தைப் பெற்ற உறுப்பினர்கள் அதை முறையாக உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தியதனாலேயே இவ்வருடமும் இக்கடனை வழங்கக் கூடியதாக இருக்கிறதென்று சங்கத் தலைவரும் மானிப்பாய்ப் பயிர்ச்செய்கை உத்தியோகத்தருமான திரு எஸ். சிவகுமாரன் தெரிவித்தார்.

## வண்டிலுடன் மோதி சைக்கிளோட்டி படுகாயம்

(யாழ்ப்பாணம்)
மாட்டுவண்டி - சைக்கிள் மோதலில் சைக்கிளில் சென்றவர் படுகாயமடைந்ததோடு அவரை சைக்கிளும் சேதத்துக்குள்ளாகியது.

வேலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருக்கையில் எதிராக வந்த வண்டியின் மாடு குறுக்கே இழுத்ததனால் வண்டியுடன் மோதுண்டு அவர் தூக்கி வீசப்பட்டனராம்.

ஆலடி வைரவர் கோவில் முன்பாக நடைபெற்ற இவ்விபத்தில் காயமடைந்தவர் வடலியடைப்பைச் சேர்ந்த இ. தவரத்தினம் என்பவராவார். (ச)

## பெரியவிளானில் 50 குடும்பங்கள்

(பண்டத்தரிப்பு)
திருகோணமலைப் பகுதியிலிருந்து அகதிகளாக வெளியேறிய சுமார் 50 குடும்பங்கள் பெரிய விளானில் தங்கியுள்ளன.

இவர்களுக்கு தேவையான உதவிகளை பண்டத்தரிப்பு பங்குத் தந்தை அருட்திரு. ஜெயக்குமார் அடிகளும் பொது மக்களும் செய்துவருகின்றனர். பண்டத்தரிப்பு வர்த்தகர்களும், பொது மக்களும் உணவு பொருட்களை அண்மையில் அன்பளிப்புச் செய்துள்ளனர்.

## கட்டிவைக்கப்பட்டார்

(வேலணை)
பல திருட்டுச் செயல்களிலும் கொலை, கொள்ளை, முயற்சிகளிலும் ஈடுபட்ட ஒருநபரை விடுதலை இயக்கமொன்று கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு அந்த நபர் தலை மொட்டையடிக்கப்பட்ட நிலையில் தபால் பெட்டி பொருத்தப்பட்ட கம்பத்துடன் கட்டிவைக்கப்பட்டார்.

இச்சம்பவம் சென்ற 4ம் திகதி புளியங்கூடல் சந்தியடியில் நிகழ்ந்துள்ளது.

நாரந்தனை வடக்கைச் சேர்ந்த மூன்றுபிள்ளைகளின் தந்தையாருக்கே இத்தண்டனை வழங்கப்பட்டது.

# செய்திச் சிதறல்

## மீண்டும் எருதுமாட்டு உழவு

(வேலணை)
தீவுப்பகுதியில் விவசாய உற்பத்தியை மேற்கொள்ளவிருக்கும் பெருந்தொகையான விவசாயிகள் இவ்வருடம் தங்களது விவசாய தேவைகளுக்கு எருது மாட்டினை பயன் படுத்திவருகின்றனர்.

இதற்குக் காரணம் யாதெனில் தற்பொழுது நாட்டின் சூழ்நிலைகளினால் எரிபொருள்களின் தட்டுப்பாடுகள், உழவு இயந்திரத்தின் கூலி அதிகரிப்பு என்பனவற்றைக் கருத்தில் கொண்டே இவர்கள் பழமை முறைகளை கையாண்டுவருகின்றனர். இப்படியா பழைய முறைகளைக் கையாண்டு வருவதினால் எருது மாடுகளின் தட்டுப்பாடுகளும் தொழில் வாய்ப்புக்களும் கிடைத்து வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அந்தக் கொடுமை பற்றி மருத்துவ அறிக்கை

(மட்டக்களப்பு)
மொறக்கட்டஞ்சேனையில் மானபங்கப் படுத்தப்பட்ட இரு கர்ப்பிணிப்பெண்களின் மருத்துவ அறிக்கை மட்டக்களப்பு உதவிப் பொலிஸ் அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட இரு கர்ப்பிணிப்பெண்களும் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறார்கள்.

மொறக்கட்டாஞ்சேனையில் உள்ள பிரம்பையடி - மாங்கேணிக் கிராமத்தில் வேலைசரசம்மா (22 வயது) 3 பிள்ளைகளின் தாயாரும் 9 மாதக்கர்ப்பிணியும், தங்கராசா கப்புலஷ்மி (8 மாதக்கர்ப்பிணியும் ஒரு பிள்ளைக்குத் தாயும் ஆகிய இருவரும் கடந்த ஞாயிறு இரவு சோதனை நடத்தப்பட்டபோது இரவு நேரத்தில் கடத்தப்பட்டது தெரிந்ததே.

## கிருபை இல்லம் முதலிடம்

(பண்டத்தரிப்பு)
பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றபோது கிருபை இல்லம் 195 புள்ளிகளைப் பெற்று 'சம்பியன்' வெற்றிக் கேடயத்தைச் சுவீகரித்துக்கொண்டது.

புளோரு இல்லம் 162 புள்ளிகளைப் பெற்று 2ம் இடத்தையும், கவுண்ட் இல்லம் 160 புள்ளிகளைப்பெற்று 3ம் இடத்தையும் பெற்றன.

இப்போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட உடற்கல்வி வட்டாரக் கல்வி அதிகாரி திரு வி. கணேசலிங்கம் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை வழங்கினார். கல்லூரி அதிபர் திருமதி க. ஆறுமுகதாசன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் சிறப்பு விருந்தினராக வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராசா கலந்துகொண்டார்.

## மருந்துக்குத் தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)
பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. காயங்களுக்கு கட்டுவதற்கு பண்டேஜ் துணிகளும், பெனிசிலின் ஊசி மருந்துகள் உட்பட முக்கிய மருந்துகளுக்கு இங்கு தட்டுப்பாடு நிலவி வருவதால் இவற்றைதனியார் கடைகளில் வாங்கிவர வேண்டிய துர்ப்பாக்கிய நிலை நோயாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இவ் வைத்தியசாலைக்கு தேவையான மருந்து வகைகளை அனுப்பி வைக்குமாறு வைத்தியசாலை பொறுப்பதிகாரி மேலிடத்தை கேட்டுள்ளார்.

## விசாலாட்சி அம்பாள் 'லக்ஷார்ச்சனை'

(யாழ்ப்பாணம்)
சுன்னாகம் - மயிலணி திருக்குடவாயில் விசாலாட்சி அம்பாள் சமேத ஸ்ரீ விஸ்வநாதசுவாமி கோவில் லக்ஷார்ச்சனை இம்மாதம் 27-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம், ஒன்பது நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

# ‘மாமரத்தில்இருந்தகணவரை 50பேர் சுற்றிவளைத்தார்கள்’

## வடக்கு நோக்கி வரும் திருமலை அகதிகள்

— கா. யோகநாதன் —

(12)

திருகோணமலையிலிருந்து முல்லைத்தீவு ஊடாக இதுவரை இருபதாயிரம் அகதிகள் யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ளார்கள். இவர்கள் அகதிகள் முகாம்களிலும் வீடுகளிலும் தங்கியுள்ளார்கள். இதேசமயம் மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் சுமார் இருபதினாயிரம் திருமலை அகதிகள் சென்றுள்ளனர்.

### மட்டக்களப்பு முகாம்களில்

மட்டக்களப்பிலுள்ள 15 முகாம்களில் திருமலையைச் சேர்ந்த 2346, தமிழ் குடும்பங்களை உள்ளடக்கிய 11,449 பேர் அகதிகளாக தங்கியுள்ளனர் இதுதவிர வாகரை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள நான்கு முகாம்களில் 1772குடும்பங்களைச் சேர்ந்த 7884பேர் கடந்த இருமாதங்களாக தங்கியுள்ளனர்.

அண்மையில் பாதிக்கப்பட்டு வெளியேறியவர்கள் மண்முனை வடக்கு பிரிவிலுள்ள முகாம்களில் 527குடும்பங்களை சேர்ந்த 2073பேரும், களுவாஞ்சிக்குடி பிரிவில் 95 குடும்பங்களைச் சேர்ந்த 470பேரும், பட்டிப்பளை பிரிவில் ஒருமுகாமில் 9குடும்பங்களைச் சேர்ந்த 43 பேரும், வாழைச்சேனை பிரிவில் 36 குடும்பங்களைச் சேர்ந்த 172பேரும் முகாம்களில் தங்கியுள்ளனர்.

### முல்லைத்தீவில் 5000 அகதிகள்

இதுதவிர திருமலையிலிருந்து வந்த சுமார் 5000 அகதிகள் முல்லைத்தீவில் உள்ள 4முகாம்களில் தங்கியுள்ளார்கள். தினமும் மூன்று நான்கு வள்ளங்களில் திருமலையிலிருந்து சுமார் 200 அகதிகள் முல்லைத்தீவுக்கு வந்துகொண்டிருக்கிறார்கள்.

திருமலையிலும், நிலாவெளி சாம்பல்தீவு, உப்புவெளி, மற்றும் பல இடங்களில் ஆயிரக்கணக்கான அகதிகள் படகுகளைப் பார்த்துக்கொண்டு கடற்கரையில் காத்திருக்கிறார்கள்.

### 50,000 திருமலை அகதிகள்

திருமலை மாவட்டத்திலுள்ள சுமார் 40,000 மக்கள் அகதிகளாக பல்வேறு இடங்களிலும் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணத்திற்குதிருமலையிலிருந்து ஏராளமான அகதிகள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. பொது ஸ்தாபனங்களின் உதவியுடன் யாழ். மாவட்டத்தில் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் அகதிமுகாம்களை திறக்க ஆலோசிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மகளிர் அவையினர் நேற்று முன் தினம் இரண்டாவது அகதிமுகாமை திறந்துள்ளனர். இம்முகாமில் ஐந்து குடும்பங்கள் தங்கியுள்ளனர். யாழ். பல்கலைக்கழகமாணவர்கள் இம்முகாமில் அடுப்படி ஒன்றை அகதிகளுக்காக கட்டிக்கொடுத்துள்ளார்கள்.

இம்முகாமில் நாற்பதிற்கு மேற்பட்ட சிறுவர்கள் குழந்தைகள் தங்கியுள்ளார்கள் இவர்களை பாடசாலையில் சேர்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ‘மிக்கவைற்’ அதிபர் திரு. கனகராசா முகாமிற்கு வந்து பிள்ளைகளுக்கு அரிச்சுவடி, கொப்பிகள், புத்தகங்களை வழங்கியுள்ளார்.

### கல்விதான் முக்கியம்

பிள்ளைகளுக்கு கல்விதான் முக்கியம் அதனை முதலில் கவனியுங்கள் என்று தொண்டர்களிடம் தெரிவித்தார். நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். இ. குருநாதனும் முகாமிற்கு வந்து அங்குள்ள நிலைமையை பார்த்துச் சென்றார்.

கிண்ணியாவைச் சேர்ந்த சிறுமி ருக்மணி வயது 18 அவரைச்சந்திட்போம்.

“என்ன நடந்தது” என்று கேட்டேன் “ஒரு கோஷ்டியினர் வந்து வெடிபோட்டாங்க பயந்து கால் நடையாக நிலாவெளிக்கு வந்தோம்.

‘யார் யார் வந்தீர்கள்”:

‘நான் அம்மா அப்பா அக்கா வந்தோம். நிலாவெளி முகாமில் இருந்தோம். அப்போது அங்கு ஒரு கோஷ்டியினர் வந்து தாக்கினார்கள் நாங்கள் இம்புறுப்புட்டி வந்து அங்கிருந்து குச்சவெளி வந்து முல்லைத்தீவு வந்தோம்.

‘எப்படி வந்தீர்கள்”

‘படகில் வந்தோம்”

கண்ணியாவில் எத்தனை வீடுகள் இருக்கிறது”

எனக்க வீடுகள் இருக்கிறது. எல்லாம எரித்து விட்டார்கள் என்று ஆட்கள் சொன்னார்கள்”.

### ஏழுவயது சிறுமி

மற்றொரு ஏழு வயது சிறுமி தாமாகவே, எனக்கருகில் வந்தார். அவர் நிலாவெளியைச் சேர்ந்தவர், பெயர் ரஞ்சனி லதா.

“சொல்லுங்கோ யார்போம் என்ன நடந்தது”: என்றேன் சுட்டான், வெட்டினான்’.

நீங்கள் என்ன செய்தீர்கள்”

“நாங்க ஓடினோம்”

எங்கு ஓடினீர்கள்,

“முஸ்லிம் வீட்டைஓடினோம்”

“எப்பவந்து வெட்டினார்கள்”

“காலையில் வந்தார்கள்,

“என்ன செய்தார்கள்’

“வெடிவைத்தார்கள். நாங்கள் ஓடினோம்முஸ்லீம் வீட்டை ஓடினோம்.

‘அங்கு எத்தனை நாள் இருந்தீர்கள்?”

“ஒருநாள்தான். பிறகு வீட்டை வந்திட்டோம்’

‘உங்களில் எத்தனைபேர்” அம்மா, அப்பா, அக்காதம்பி அண்ணன், ஐந்துபேரா? ஆம்.

படிக்கிறீங்களா?”

“ஆம்.”

‘வீட்டைவந்து என்ன செய்தீர்கள்?”

“வீட்டைவந்து சாப்பிட்டு விட்டுப் பயத்தினால் இரவில் முஸ்லிம் வீட்டை போய்ப் படுப்போம்.”

‘இங்கு ஏன் வந்தீர்கள்?”

“குழப்பம் இல்லாட்டில் வீட்டிலே இருப்போம்.’

“அங்கே குழப்பமா?”

“ஆம்.”

“இங்கு எப்படி வந்தீர்கள்?’

“‘போட்’டிலே வந்தோம்”.

### உறவினர் வீட்டில்

யாழ்ப்பாணத்திற்கு திருமலையிலிருந்து அகதிகளாக வந்த சில குடும்பங்கள் தங்கள் உறவினர், நண்பர்கள் வீட்டில் தங்கியுள்ளார்கள். அவர்களில் சில குடும்பங்கள் அகதி முகாம்களுக்கு வந்துள்ளன.

எஸ். பவானிதேவி (வயது 35) திருமலையிலிருந்து வந்தவர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். சில நாட்கள் உறவினர் வீட்டில் தங்கியிருந்தார். தற்போது நவாலி அகதிமுகாமுக்கு வந்துவிட்டார்.

திருமலையில் இருக்கும்போது அவரது வீட்டில் கொள்ளை நடந்தது. 35 ஆயிரம் ரூபாவுக்கு மேல் நஷ்டமேற்பட்டது. இதுபற்றி திருமலை பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டது. இதனால் மற்றொரு வீட்டிற்குச் சென்று வசித்துவந்தார். அங்கும் தாக்குதல் நடந்து, பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டு, குடும்பத்துடன் யாழ்ப்பாணம் வந்து உறவினர் வீட்டில் தங்கியிருந்தார், வீட்டுச் சாமான்கள், மாடு, கோழிகள் எல்லாம் கொள்ளையடிக்கப்பட்டு விட்டன. தற்போது அகதி முகாமில் தஞ்சமடைந்துள்ளார்.

திருகோணமலையைச் சேர்ந்த மற்றொரு குடும்பம் அகதிகளாக யாழ்ப்பாணம் வந்து உறவினர் வீட்டில் ஒருவாரம் தங்கியிருந்தனர். யாழ். அகதிகள்முகாம் ஆரம்பித்ததும் அங்கு வந்துவிட்டனர் இப்படி இன்னும் சிலகுடும்பங்கள் உறவினர் வீட்டில் தங்கியிருந்த பின்னர் அகதிகள் முகாமிற்கு வந்தனர்.

### நேராக முகாமிற்கு

சில குடும்பங்கள் யாழ்ப்பாணத்தில் உறவினர் இருந்தும் நேராக அகதிகள் முகாமிற்கு வந்துள்ளனர். அராலியை சேர்ந்த ஒருகுடும்பத்தினர் திருமலையிலிருந்து நேராக யாழ். அகதி முகாமிற்குவந்துள்ளனர் அவர் களைச்சந்திப்போம்.

சாம்பல்தீவை சேர்ந்தவர் வள்ளிநாயகி வயது 29 பெற்றோர் கும்புறுப்பிட்டியில் இருப்பவர்கள்.

என்ன நடந்தது விபரமாக சொல்லுங்கள் என்றேன். வைகாசியிலிருந்து ஆவணி மட்டும் தொடர்ந்து பதற்றம் நீடித்தது. அங்குலே இருக்க ஏலாது என்புருசனை நெடுங்காட்டுக்கு அனுப்பி அனுப்பி அவர் வரும் மட்டும் எனக்கு நெஞ்சிடி அதனால் 19 நாள் கும்புறுப்பிட்டியில் அம்மா வீட்டில் இருந்தோம் பின்சாம்பல்தீவு வந்தோம்.

பின் என்ன செய்தீர்கள்?

ஆடிமாதம் 14 நாள் காட்டிலே இருந்தோம்.

சாப்பாடு?

சாப்பாடு கொஞ்சம்நாங்கள் கொண்டு போனோம் பின் சாப்பாடு இல்லாததினால் திரும்பி வந்தோம் ஆடிமாதம் வீட்டில் இருந்தோம்.

பிறகு என்னநடந்தது?

பிறகு பதற்றம் ஏற்பட்டது அப்பு அம்மா எல்லாரும் வந்திட்டார்கள்.

““பின்னர்?”

“நான் தனிய இருக்க ஏலாது பின்சாம்பல்தீவிலும் பதற்றம் ஏற்பட்டது. நாடு கிடு வீடுவாசல் எல்லாம் சுற்றித்திரிந்தார்கள்”

“எத்தனை பிள்ளைகள்?”

“4 பிள்ளைகள்; என் கணவர் காலை 6மணிக்கு தொழிலுக்கு போனார். அவர் கூலி வேலை செய்பவர்”

### வீட்டிற்கு வந்தார்

“எங்கே இருந்தீர்கள்?”

“அவருடைய தங்கச்சி வீட்டில் இருந்தோம். அவர் காட்டுக்குள் இருந்துவிட்டு ஆட்கள் போய்விட்டார்கள் என நினைத்து வீட்டிற்கு வந்தார். நான் சமைத்து வைத்திருந்தேன் சாலையில் ஒருதரும் சாப்பிடவில்லை எங்கள் வீட்டிற்கு முன்னுள்ள காட்டுக்குள் ஒரு கோஷ்டியினர் தாண்டினார்கள் நான் அவருக்கு சாப்பாடு கொடுத்துவிட்டு காட்டுக்கு “ஓடுங்கோ’ என்று கலைத்து விட்டேன், பிற்பகல் 2 மணியாகிவிட்டது. அவர்கள் போய் விட்டார்கள் என நினைத்து அவர் வீட்டிற்கு வந்தார், அவர்கள் பின்னுக்கு வர மாடுகள் முன்னுக்குப்போக அவர் அலம்பலுக்குள் ஓடிப்போய் ஒளிக்கிற இடம் தெரியாமல் ஒருபட்டமாமரத்தில் ஏறி இருந்தார்”

### கடைசிச் சோறு

பிறகு என்ன நடந்தது?

“மூன்று பக்கத்திலும் சுமார் 50 பேர் இருக்கு’, சுற்றி வளைத்துவிட்டார்கள்” இவர் ‘கடவுளே’ என்று போட்டு, பெண்டில் பிள்ளைகள் எல்லாம் நினைத்து, கடைசிச் சோறும் வாங்கி சாப்பிட்டாருக்கும். என நினைத்துவிட்டுப் போட்ட இடமெல்லாம் சேர்த்து காப்பாற்றி விட்டது. நாங்கள் புறப்பட்டு முல்லைத்தீவுக்கு வந்தோம்”

பிறகு என்ன செய்தீர்கள்?

முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணம் வந்தோம். அராலியில் எங்களுக்கு உறவினர்கள் இருக்கிறார்கள். பஸ்ஸில் யாழ்ப்பாணம் வந்தபோது இரவாகி விட்டது, அதனால் நேராக இங்கு வந்தோம்.

“அராலியில் உள்ளவர்களுக்குத் தெரியாதா?

நாங்கள் வந்ததென்று அவர்களுக்குத் தெரியாது. அப்ப அவரை எல்லாம் முல்லைத்தீவுக்கு வராதென்று வந்த ‘போட்’ இல்லாமல் திரியாயில் இருக்கினமாம்.

(தொடரும்)

---

## ஓய்வு பெற்றார்

(நயினாதீவு)

நயினாதீவு அஞ்சல் அலுவலகத்தில் பல்லாண்டு காலமாக அஞ்சல் ஊழியராகக் கடமையாற்றிய திரு ஆறுமுகம் முத்துக்குமாரு இம்மாதம் முதல் சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

அவரைக் கௌரவித்து அஞ்சலக அதிபர்கள், ஊழியர்கள் உட்பட எல்லோரும் சேர்ந்து சேவைநலம் பாராட்டு விழா வொன்றினை நடத்தினார்கள்.

---

## உப-தலைவராக தெரிவு

(நயினாதீவு)

புங்குடுதீவு-நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நடப்பு வருடத்திற்கான உப-தலைவராக நயினாதீவு வடக்கு முன்னாள் கிராமோதய சபைத் தலைவர் திரு. நா. க. குமாரசூரியர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். இவர் நயினாதீவுஸ்ரீ நாகபூஷணி வித்தியாலய அபிவிருத்திச் சபையின் செயலாளரும், நயினாதீவு இந்து இளைஞர் மன்றத்தின் தலைவருமாவார். சமூக சேவையாளரான இவர், பொது ஸ்தாபனங்கள், ஆலயங்கள் உட்பட பல நிறுவனங்களில் உறுப்பினராக இருந்து சேவையாற்றி வருகின்றார்.

---

## அகதிமாணவருக்கு கல்வி வசதி

(யாழ்ப்பாணம்)

யாழ். அகதி முகாமில் உள்ள நாற்பதுக்குமேற்பட்ட மாணவர்களுக்கு நல்லூர் செங்குந்தா பெண்டிக்ற் றோமன் க. பாடசாலையில் படிப்பதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

யாழ், அகதி முகாமில் உள்ள மாணவர்கள் இம்முகாம்களுக்கு அருகே உள்ள நல்லூர் செங் பெனடிக்ற் பாடசாலையில் அடுத்த வாரம் முதல்கல்வி பயில்வதற்கான ஒழுங்குகளை யாழ். முகாம் பொறுப்பாளர் டாக்டர் ச. சசிதரன் கல்வித் திணைக்கள அதிகாரிகளுடனும் மேற்படி பாடசாலை அதிபர் சகோதரி லூசா வுடனும் தொடர்பு கொண்டு கல்வி பயில ஒழுங்குகள் செய்துள்ளார்.

இம்மாணவர்களுக்கான வகுப்புகள் பிற்பகலில் நடக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இம்மாணவர்களுக்கு வேண்டிய புத்தகங்கள், கொப்பி, பேனை என்பன போன்றவற்றையும் ‘மிக்கவைற் ஸ்தாபனம்’ வழங்கச் சம்மதம் தெரிவித்துள்ளது. (ஐ)

---

## “அரசாங்கம் தொழிற்சாலைகளை பலவீனப்படுத்தி வருகிறது”

### தபாலதிபர் பேச்சு

(கொழும்பு)

‘அரச ஊழியர்கள் சம்பள உயர்வு கேட்கும் போதெல்லாம் அரசு மறுத்தே வருகின்றது. ஆனால் இன்று வடக்கு கிழக்கில் பயங்கரவாதத்தை ஒழிக்கும் முயற்சியில் கோடிக்கணக்கான பணத்தை ஆயுதங்களுக்காக அரசு செலவு செய்கின்றது.’

இவ்வாறு தபால் அதிபரும் கல்முனை-அம்பாறை அஞ்சல் தொலை தொடர்பு சேவையாளர் சங்கச் செயலாளருமான திரு. இ. திருநாவுக்கரசு, கொழும்பு புதிய நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற அஞ்சல் தொலைதொடர்பு சேவையாளர் சங்கத்தின் 39-வது பேராளர் மகாநாட்டில் உரை நிகழ்த்தும் போது குறிப்பிட்டார்.

இந்த மகாநாடு தாய்ச் சங்கத் தலைவர் திரு. உபாலி எஸ். ஜெயசேகர தலைமையில் நடைபெற்றது. 600க்கு மேற்பட்ட பிரதிநிதிகள் இந்த மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

திரு. திருநாவுக்கரசு தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது;

தமிழ் பேசும் மக்களுக்கு அரசியல் தீர்வை ஏற்படுத்துவதன்மூலம் செலவழிக்கும் பணத்தை மிதப்படுத்தி அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வை வழங்கலாம். எனவே இது விஷயத்தில் தாய்ச் சங்கம் தமிழ்ப் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கு காலம் தாழ்த்தாது அரசியல் தீர்வு ஒன்றை ஏற்படுத்த அரசாங்கத்தை நிர்ப்பந்திக்க வேண்டும்.

(8-ம் பக்கம் பார்க்க)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# 'இலங்கையின் பணச் சந்தை:' யாழ். லயன்ஸ் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண லயன்ஸ் கழகத்தின் கல்விக் குழுவினர் தமது சேவைத் திட்டங்களில் ஒன்றை இம்மாதம் பத்தொன்பதாம் திகதி நிறைவேற்றுவார்கள்.

வேம்படி மகளிர் உயர் கல்லூரியில் "சமகாலக் கருத்துக்கள்" என்ற தொடரின் முதல் இதழான "இலங்கை பணச் சந்தையமைப்பு" என்ற நூல் அன்றையதினம் யாழ்ப்பாண லயன்ஸ் கழகத்தினரால் வெளியிடப்படும்.

தமிழ்மொழியில் உயர்கல்வி பயிலும் மாணவர்கள் போதிய நூல்கள் தமிழில் இல்லையால் மிகவும் கஷ்டப்படுகின்றனர். பாடநூல்களோ, துணை நூல்களோ, உசாத்துணை நூல்களோ தமிழ்மொழியில் போதியளவு காணப்படவில்லை. அதிலும் முக்கியமாக சமகால நிகழ்வுகளைப் பற்றி அவர்கள் அறியவேண்டுமானால் ஆங்கில மொழி நூல்களிலும், வெளியீடுகளிலும் அதிகம் தங்கியிருக்க வேண்டியுள்ளது: சுயபாஷைக் கல்வித்திட்டம் அமுல் நடத்தப்பட்டபின்னர் ஆங்கில அறிவு மாணவர்கள் மத்தியில் குன்றி இருப்பதனால் இவ்விடயத்தில் மாணவர்கள் மத்தியில் குன்றி இருப்பதால் இவ்விடயத்தில் மாணவர்கள் மிகவும் சிரமப்படவேண்டியுள்ளது.

இக்குறைபாட்டை ஓரளவு நீக்கும் நோக்குடன் யாழ்ப்பாண லயன்ஸ் கழகம் இச்சேவைத் திட்டத்தினை வகுத்துள்ளனர்.

சமகாலத்தில் நிகழும் மாற்றங்களைப் பற்றி இத்தகைய பிரசுரங்களை வெளியிட அவர்கள் எண்ணியுள்ளனர்.

இலங்கையின் பணச் சந்தை சந்தையமைப்பு என்ற இச்சிறுநூல் பணச்சந்தை, வங்கிகளுக்கிடையேயான அழைப்புக் கடன் சந்தை, உள்ளூர் அந்நியச் செலவாணிச் சந்தை, கரைகடந்த வங்கிச் சந்தை, திறைசேரி உண்டியல் சந்தை, பணத்தரகர் நிறுவனங்கள் என்ற பணச் சந்தையின் நிறுவனங்கள் பற்றியும், வைப்புச் சான்றிதழ் போன்ற பணக் கருவிகள் பற்றியும் விரிவாக ஆராய்கின்றது. வங்கியியலில் கணிமாணிப்பட்டம் பெற்ற வங்கி நிறைவேற்றுனர் என்ற வகையில் இருதசாப்த அனுபவம் பெற்றுள்ள கு. கல்வளை சேயோன் இந்நூலை ஆக்கித்தந்துள்ளார்.

சரளமான எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ள இந்நூல், க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு பொருளியியல், வர்த்தகம் என்னும் பாடநெறிகளை மேற்கொள்வோருக்கு அருந்துணையாக இருப்பதுடன், வங்கியியல் பரீட்சைக்குத் தோற்றுவோருக்கும் உரிய நூலாகும். தொழில்நுட்பக் கல்லூரியினால் நடத்தப்படும் வர்த்தக நெறிப் பரீட்சைக்குத் தோற்றுவோரும், பட்டதாரி மாணவர்களும் இதனால் பயன்பெறலாம். இத்தகைய அரியநூலை மலிவு விலையில் யாழ்ப்பாண

(8ம் பக்கம் பார்க்க)




# புரட்டாதிச் சனி வழிபாடு

சனி மாதமாகிய புரட்டாதியில் முதல் சனிக்கிழமையில் சூரியனின் சக்திகளுள் இச்சக்தியாகிய சாயாதேவி ருதுஸ்நானம் முடிந்த மங்களமான சமயத்தில் தனது நாயகனாகிய சூரியனைக் கண்டவுடன் இக்கையின் வாகனமாகிய காகவாகனத்துடனும் சூரியனது மனோவேகத்துடனும் சனீஸ்வரன் தோன்றினார் என்பது புராணவரலாறு. இதனாலேயே புரட்டாதி மாத சனீஸ்வர வழிபாடு முதன்மை பெறுகிறது.

தனது மைந்தனாகிய சனியின் பார்வை, சூரியனுக்குப்பட்ட போது குஷ்டரோகம் ஏற்பட்டதால் சனியைத் தூக்கி

### கு. நகுலேஸ்வரக் குருக்கள்

வெளியே வீசிவிட்டான்: அதனால் சனியின் கால் முடமாகியது. "முடவன்" என்ற நாமம் இதனாலேயே ஏற்பட்டது.

சனிதோஷம் உள்ளவர்கள் எள்கலந்த உணவை உட்கொள்வதும் இரும்புப் பாத்திரம், கறுப்புத்துணி, எள், நல்லெண்ணெய் என்பவற்றைத் தானம் செய்வதும் சனிபகவானுக்கு கிரகசாந்தி செய்வதும் உத்தமமாகும். அது இயலாதோர் புரட்டாதி மாதச் சனிக்கிழமைகளில் விரதம் இருந்து தமது பாவங்களைத் தீர்க்கும் பொருட்டு பாபமாகிய கறுப்புத் துணியில் எள்ளை வைத்து முடிந்து சனீஸ்வரனுக்கு பிரீதியான கருணை வெள்ளமாகிய நல்லெண்ணெயினுள் அமிழ்த்தி சனீஸ்வரனது கோபாக்கினியால் அப்பொட்டளியை நீருக்கியபின் சனிபகவானுக்கு வன்னி வில்வம், நீலபுஷ்பம் பத்திரத்தாலோ அல்லது எள்ளாலோ அர்ச்சனை வழிபாடாற்றிப் பாவங்களைப் போக்கிக் கொள்ளலாம். நீலக்கல் பதித்த மோதிரத்தை அணிவதாலும் சனியின் தோஷம் ஓரளவு சாந்தியாகும்.

சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், பூராடம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு தற்போது ஏழரைச் சனி தோஷம் உள்ளது. ரேவதியின் பிற்பகுதியில் பிறந்தவர்களுக்கு அற்பமாகவும் அச்சுவினி பரணி நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு கூடுதலாகவும். அட்டமத்துச்சனி தோஷம் உண்டு. இந்த நட்சத்திரங்களில் பிறந்தவர்கள் நவருது புரட்டாதிச் சனியிலிருந்து ஒவ்வொரு சனியும் விரதமிருந்து மேற்கூறிய வழிபாடுகளின் மூலம் சனி பிரீதிசெய்து தமது சனி தோஷத்தை நீக்கிக் கொள்ளலாம்.

பக்தர்கள் புரட்டாதிச்சனி வாரங்களில் மேற்படி தேவஸ்தானம் சென்று கண்டகி தீர்த்தமாடி நகுலாம்பிகா சமேத நகுலேசுவரப் பெருமானையும் அவனருள் பெற்றுத் தன்னை வழிபடுபவர்க்கெல்லாம் நலம் மிக அருளிடும் ஸ்ரீ சனிபகவானையும் வழிபட்டுக் கிரகபீடை நீங்கி நலம் பெறுவார்களாக.

# "முதலில் இயற்கைப் பசளை; பின்னர் செயற்கை உரம்"

## கருத்தரங்கில் விளக்கம்

(பண்டத்தரிப்பு)

செயற்கை உரத்தை அதிகமாகப் பாவிப்பதினால் மண்வளம் கெட்டுவிடுமென்றும், காணி பழுதாகிவிடும் என்றும் எமது யாழ். மாவட்ட விவசாயிகள் மத்தியில் ஒரு தவறான கருத்து இருந்துவருகின்றது. காணிகளுக்கு நல்ல இயற்கைப் பசளைகளைப் போட்டு பின்னர் தேவையான நேரத்தில் சிபார்சு செய்யப்பட்ட செயற்கை உரத்தை அளவோடு போட்டுவந்தால் மண்வளம் ஒருபோதும் பாதிக்கப்படமாட்டாது;"

இவ்வாறு சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உர வாரத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தொல்புரம் விவசாயப் போதனாசிரியர் திரு. ஜி. ரீ. சோமநாதன் குறிப்பிட்டார்.

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற இக் கருத்தரங்கிற்குச்சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. க. சண்முகநாதன் தலைமை வகித்தார்.

யாழ். திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திருமதி சரோஜினி மகேந்திரன் உரையாற்றுகையில் உரவாரத்தின் முக்கியத்துவம் பற்றியும் பேலஷாக்கு உணவுப் பயிர்களுக்கு போடப்படும் உரவகைகளைப் பற்றியும் விளக்கிக் கூறினர்.

யாழ். சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. கே. சண்முகலிங்கம் பண்டத்தரிப்பு விவசாய சேவை அது

[8-ம் பக்கம் பார்க்க]

# பசுமைப் புரட்சி பிரசுரம்

(வேலணை)

'பசுமைப் புரட்சியை ஏற்படுத்தி வறுமையை ஒழிப்போம். ஒரு சிறு நிலத்தைத் தானும் தரிசாக இருக்கவிடோம்.' என்ற வாசகங்களை ஒலிபெருக்கி மூலம் தீவுப்பகுதி மக்களுக்கு இயக்கத்தினர் கூறிவருகின்றனர்.

மேலும் இவ்வியக்கத்தினர் வேலணை, ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, கரம்பன், புளியங்கூடல், நாரந்தனை, அல்லைப்பிட்டி, மண்டைதீவு ஆகிய இடங்களுக்கும் சென்று பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக மேற்கூறப்பட்ட இடங்களில் உள்ள விவசாயிகள் பொதுமக்களிடம் அவர்களுக்குரிய நிலங்களில் விவசாய உற்பத்தியை மேற்கொள்ள வேண்டுமெனவும், ஒரு துண்டு நிலத்தையாவது வீணாக்கலாகாது பயிர் செய்யாது விடப்படும் நிலங்களை நாங்கள் கைப்பற்றி விவசாயச் செய்கையில் ஆர்வத்துடன் ஈடுபடும் மக்களிடம் பகிர்ந்து கொடுப்போம் என்றும் இக்காணி கைப்பற்றுவது காணி சுவீகரிப்பல்லவெனவும் அவர்கள் கூறுகின்றனர்.

இப்பகுதிகளில் கட்டாக்காலியாக திரியும் ஆடு, மாடுகளை உடனடியாக கட்டுப்படுத்தும்படியும், தவறும் பட்சத்தில் கட்டாக்காலி ஆடு, மாடுகள் பிடிக்கப்படுவதுடன் உரிமையாளர்கள் மீது கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் இந்த இயக்கம் தெரிவித்து வருகிறது.

# 'தொழிற்சங்கங்களுக்கு புதிய கடமைகள் ஏற்பட்டுள்ளன'

(யாழ்ப்பாணம்)

தொழிற் சங்கங்கள் புதிய நிலைமைகளைக் கருத்தில் கொண்டு புதிய கடமைகளை நிறைவேற்றவேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. அன்றாட பிரச்னைகளுக்காகப் போராடி ஊதிய உயர்வு, அன்றாட வாழ்க்கைச் செலவுப் பிரச்னைகள் தொழிற்சங்க உரிமைகளுக்காகவும் அனுபவித்துவரும் உரிமைகள், சலுகைகளையும் பாதுகாக்கவும் தொழிலாளி வர்க்கத்தை ஐக்கியப்படுத்திப் போராடவேண்டியுள்ளது.

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் திரு. எஸ். விஜயானந்தன் வர்க்கப் போராட்டமும் இன்றைய இளைஞர்களும் என்றும் கருத்தரங்கில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''புரட்சிகர தத்துவம் இல்லாமல் புரட்சிகர கட்சி இருக்கவே முடியாது. இதை உணர்ந்து சரியான மார்க்சிசலெனினிச கோட்பாடுகளை இன்றைய இளைஞர்கள் பின்பற்ற வேண்டும்''

''வர்க்கப் போராட்டம் என்பது தொழிலாளி வர்க்கமும், விவசாய வர்க்கமும் ஏனைய உழைக்கும் வர்க்கமும் நடத்துகின்ற வாழ்க்கைப் போராட்டமாகும். முதலாளித்துவக் கொள்கைகளும், சுரண்டலுமே வர்க்கப்போராட்டத்தைத் தூண்டிவிடுகின்றன. விலைவாசிஉயர்வு, வேலையின்மை, திண்டாட்டம் நாணய மதிப்புக் குறைப்பு, வறுமை போன்றவை முதலாளித்துவ சமூக அமைப்பின் பிரதிபலிப்புகளாகும். வர்க்கக் கோரிக்கைகளுக்கானபோராட்டங்களுக்கு தொழிற் சங்கங்கள் வர்க்க அடிப்படையில் வழிகாட்டவேண்டிய கடமையுண்டு. இதற்கு பல சோதனைகளையும் சவால்களையும் சந்திக்கவேண்டும்.

''தமிழ் மக்களின் நியாயபூர்வமான கோரிக்கைகளை வென்றெடுக்க ஒன்றிணைந்த வெகுஜனப் போராட்டமே முதற்கண் அவசியம். இப்படிப்பட்ட போராட்டம் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் ஏனைய உழைக்கும் மக்களின் உற்சாகமான கூட்டிருப்பதுடன் நடத்தப்படவேண்டும். இப்போராட்டம் தேசிய ரீதியில் அமைய வேண்டும்.

'முதலாளித்துவ சமூக அமைப்பிலிருந்து கொண்டே அதனை மாற்றியமைக்காது சோசலிச சமூக அமைப்பினுக்கும் வாய்ப்பு வசதிகளை அனுபவிக்க முயற்சிப்பது மிகப்பெரிய தவறும் இதனால் முழுச் சமுதாயமுமே பாதிக்கப்படும் இதனை இளைஞர்கள் உணர்ந்து செயல்படுவது அவசியம் என்றார்.

## நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி அரசாங்க ஒய்வூதியர் நலன் புரிச் சங்கத்தின் புனருத்தாரணக்கூட்டம் அண்மையில் திருநெல்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலையில் திரு. தம்பு இராஜதுரை தலைமையில் நடைபெற்றது; நிர்வாக உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர் தலைவர்: திரு வ. மாணிக்கம் உப தலைவர்கள் திரு கி. க. சு. அன்றூது திரு. தி. கணபதிப்பிள்ளை திரு க. வ. சுப்பிரமணியம் செயலாளர்: திரு நாகலிங்கம் உபசெயலாளர்: திரு சு. இன்னத்தம்பி தனாதிகாரி- திரு க. தம்பியப்பா உபதனாதிகாரி திருமதி பொ. கணபதிப்பிள்ளை ஆலோசகர் திரு அ. இராஜதுரை திரு. ஆ கி. கந்தசாமி 8 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

## அரசாங்கம்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

தற்பொழுது தமிழ் ஊழியர்களுக்கு இருப்பது போன்று எதிர்காலத்தில் சகல ஊழியர்களுக்கும் ஆங்கிலத் தேர்வுப் பரீட்சை நடாத்த வேண்டும்.

தலைவர் தமது உரையில், ஐக்கிய தேசியக் கட்சி, ஏனைய அரசாங்கங்களைப் போலவே தொழிற்சங்கங்களைப் பலவீனப் படுத்தவும், தொழிலாளர் உரிமைகளை மறுக்கவும் ஆரம்பித்துள்ளது. நாம் எதையும் போராடித்தான் பெற வேண்டிய நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்" என்றார். மா]

## "எமது கலை, கலாசாரம் பேணப்பட வேண்டும்"

(மாவிட்டபுரம்)

''எமது கலை கலாச்சாரம், பண்பாடுகளை நாம் பேணிக்காக்கவேண்டும். அவைதான் எமக்கு பெருமைதேடித் தருவன. பாடசாலை படிப்புடன் இவற்றிலும் மாணவர்கள் அதிக அக்கறை கொள்ள வேண்டும்.''

இவ்வாறு வீமன்காமம் மகா வித்தியாலயத்தில் இடம் பெற்ற காங்கேசன்துறை கல்வி வட்டார பாடசாலைகளுக்கிடையேயான இசை, நடன, நாடக போட்டிகளுக்கு தலைமை தாங்கிப் பேசிய காங்கேசன்துறை வட்டாரக் கல்வி அதிகாரி திரு பி. சிவஞானசுந்தரம் கூறினார்;

காங்கேசன்துறை கல்வி வட்டாரத்தைச் சேர்ந்த 28 பாடசாலைகள் இப்போட்டிகளில் கலந்து கொண்டன.

வட்டாரக் கல்வியதிகாரி மேலும் பேசுகையில் இன்றுள்ள சூழ்நிலையில் இப்போட்டிகளுக்கு மாணவர்கள் வந்து ஆர்வத்துடன் கலந்து கொண்டமை பெரிதும் பாராட்டுதற்குரியது'' என்று கூறினார்.

வீமன்காமம் மகா வித்தியாலய அதிபர் திரு. மு. இவராசா உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்.

## இலங்கையின்...

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

லயன்ஸ் கழகத்தின் உறுப்பினர் எவரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம். இப்பிரசுரத்திற்கு மாணவ சமுதாயமும், ஆசிரியர்களும் அளிக்கும் ஆதரவு இத்தகைய பல நூல்களைத் தொடர்ந்தும் வெளியிடத் தம்மை ஊக்குவிக்கும் என யாழ்ப்பாண லயன்ஸ் கழகத்தினர் நம்புகின்றனர்.

— ஞா. யு.

## இல்ல மெய்வல்லுனர் போட்டி

(மானிப்பாய்)

யாழ். நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி வரும் வியாழக்கிழமை பாடசாலை மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது.

மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு எஸ். தனஞ்செயன் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விளையாட்டுப் போட்டியில் வலி. தென்மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. கே. சண்முகநாதன், யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடப்பேராசிரியர், சட்டவைத்தியஅதிகாரி வைத்திய கலாநிதி என் சரவணபவானந்தன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவிருக்கின்றார்கள்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடபேராசிரியர் வைத்திய கலாநிதி திருமதி ரி சரவணபவானந்தன் பரிசில்களை வழங்கவிருக்கின்றார்.

# 'தமிழ்மகளிர் அவை முகாம்: தொடர்ந்தும் உதவி தேவை'

## முகாமையாளர் நன்றி கூறுகின்றார்

(எம்: ரி: சந்திரகுமார்)

''எச்சமயத்திலும் அகதிகளாக வருவோரை எமது முகாமிற்கு இன்முகத்துடன் வரவேற்கத் தயாராகவிருக்கின்றோம். அவர்களின் துயர் துடைப்பதே எமது பணி. கடந்த 2ம் திகதி ஒரு குடும்பத்துடன் ஆரம்பமான இம் முகாம் இன்று 105 பேருக்கு சிறப்பாக சேவையாற்றிவருகிறது. பல்வேறு அமைப்புகள் அகதிகள் நலன் கருதித்தொடர்ந்தும் உதவிகளை வழங்கி வருகின்றன.

இவ்வாறு தமிழீழ மகளிர் அவையினரால் நடாத்தப்படும் யாழ். அகதிகள் முகாமின் முகாமையாளர் டாக்டர் பி. சசிதரன் 'ஈழநாடு' வுக்கு அளித்த பேட்டியொன்றில் குறிப்பிட்டார்.

இம்முகாமிலிருக்கும் அகதிகளின் தேவைகளை பூரணமாக நிறைவேற்றுவதில் நீங்கள் எவ்விதம் செயல்படுகிறீர்கள் எனக்கேட்டபோது அவர் பின்வருமாறு விளக்கினார்:

அகதிகளை செவ்வனே பராமரித்து அவர்களின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுவதையே எமது முகாம் நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வருகிறது. எமக்குப் பக்கபலமாகப் பொதுநல ஸ்தாபனங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள், பொதுமக்களுட்படப் பல்வேறு வகைகளில் உதவிகள் கிடைத்துவருகின்றன.

மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் தேவையான உணவுப் பொருட்களை இன்றும் 3வது நாளாகத் தொடர்ச்சியாக வழங்கிக் கொண்டிருக்கிறது. தவிர, உதவி அரசாங்க அதிபர் பிரிவு, பொது ஸ்தாபனங்களும் உணவுப் பொருட்கள், உடுபிடவைகள் என்பனவற்றை வழங்கிய வண்ணமிருக்கின்றன.

உணவுப்பொருள்களை வழங்க விரும்புவோர் தன்னுடன் முற்கூட்டியே தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொண்டார்:

அகதிகளுக்கான மருத்துவ வசதிகளைப் பொறுத்தமட்டில் அரியாலை மகப்பேற்று நிலையம், ஹோமியோபதி வைத்திய நிலையம் உட்பட பல்வேறு தனியார் நிலையங்களும் அகதிகளின் உடல்நிலைகளை பரிசீலனை செய்து மருந்துகளை வழங்குவதோடு சிகிச்சையுமளித்து வருவதாக தெரிவித்த அவர் யாழ். அரசினர் வைத்தியசாலையும் இவ்விடயத்தில் அதிக அக்கறை காட்டிவருவது பாராட்டப்படவேண்டிய தெனக் குறிப்பிட்டார்.

அகதிகளின் பல்வேறுதேவை கருதி சச்சேரி-யாழ் மினிபஸ் சேவையினர் இலவசமாக தமக்கு சேவையாற்றிவருவதாகவும் இச்சேவைகுறித்து தமிழ் மகளிர் அவை சார்பில் தாம் நன்றி தெரிவிப்பதாககூறினார். அகதிகளை யாழ் ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்கென எடுத்துச் செல்வதிலும்: மற்றும் பல்வேறு தேவைகள் கருதி தேவையான இடங்களுக்கு அகதிகளை கொண்டு செல்வதிலும் இம்மினிபஸ்கள் சேவையாற்றுவது குறிப்பிடத்தக்கது.

அகதிகளின் வசதிகளை அதிகரிக்கும் வகையில் புதிய குடிசைகளை அமைத்தல், புதிதாக மலசல கூடம் அமைக்கும் பணிகளில் செல். ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப்படையினர் மாவட்ட உத்தியோகத்தர் திரு. ஏ. ஆர். சுபாபரன் தலைமையில் பணியாற்றி வருவதாகவும் அகதிகள் இருக்கும்வரை இவர்கள் தொடர்ந்தும் சேவையாற்றுவார்கள் எனவும் தெரியவந்தது. புதிய குடிசைகள், புதிய மலசலகூடங்கள் அமைக்கும் வேலைகள் பூர்த்தியடைந்து வருகின்றன.

இது இவ்விதமிருக்க நல்லூர் ஆசீர்வாதம் தமிழ்க் கலவன் பாடசாலையில் அகதிகளாக வந்த மாணவர்களுக்கு வகுப்புக்களை நடாத்த பாடசாலை அதிபர் முன் வந்துள்ளார். இவ் வகுப்புக்கள் தினசரி மாலை 2மணி தொடக்கம் 4 மணி வரை நடைபெறவுள்ளன. இதனால் இம்மாணவர்கள் பெரும் பயனடைவார்களென முகாம் முகாமையாளர் நம்பிக்கை தெரிவித்தார்.

அகதிகளுக்காக நல்லுதவிகள் வழங்கிவருகின்ற பொதுநல அமைச்சருக்கும், பொதுமக்களுக்கும் உதவி வழங்கி அகதிகளின் துயர் துடைக்கும் பணியிலீடுபடுமாறு முகாமையாளர் மேலும் கேட்டுக் கொண்டார். (ச)

## "மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் அதிக ஈடுபாடு வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

''ஆங்கிலம் உலகுக்கான நுழைவுச்சீட்டு என்பார்கள். ஆங்கில அறிவு உள்ளவர் உலகின் எப்பகுதிக்கும் சென்று அம்மொழியின் ஊடாக அப்பகுதி மக்களோடு தொடர்பு கொண்டு தமது பணிகளை இலகுவில் செய்து முடிக்கமுடியும்.''

இவ்வாறு வண்ணார்பண்ணை இந்துதம்பி தமிழ் வித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆங்கில தின விழாவில் பிரதம நடுவராகக் கடமையாற்றிய நல்லூர் கல்விவள நிலைய அதிகாரி பி. நடராசா உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்:- முன்னர் ஆங்கிலம் இரண்டாம் மொழி எனக் குறிப்பிடப்பட்டாலும் இப்போது புதிய பாடத் திட்டத்தில் சர்வதேச மொழி என ஆக்கப்பட்டுள்ளது. இப்பெயர் மாற்றம் மாணவர் உள்ளத்தில் ஆங்கிலத்தின் அவசியத்தை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

ஆங்கிலத்தில் அதிக ஈடுபாட்டை ஏற்படுத்தும்வகையில் ஆங்கிலப் போட்டிகளைக் கல்வித்திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது. இளமையில் இருந்தே அனைவரும் தமிழுக்குச் சமமாக ஆங்கிலத்தையும் பயின்று திறமை பெறவேண்டும் என்றார்.

அதிபர் கா. கணேசதாசன் தலைமையில் போட்டி நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஆசிரியர்கள் திருமதி எம். சிவகுருநாதன், வி. செல்வரத்தினம் ஆகியோர்கள் நடுவர்களாகக் கடமையாற்றினர். ஆங்கில எழுத்து, பேச்சு, வாசிப்பு, பாடல் போன்ற போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவர்கள் வட்டாரப் போட்டியில் பங்குபெறத் தெரிவுசெய்யப்பட்டனர்.

## முதலிடம் பெற்றது

[யாழ்ப்பாணம்]

நல்லூர் கல்வி வட்டாரப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற இசை, நடனம் ஆகிய இரு போட்டிகளிலும் நல்லூர் செல். பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

குழு ரீதியில் நடைபெற்ற இசை, நடன புதிய ஆக்கப் போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட இவ் வித்தியாலய மாணவர்கள் பலராலும் பாராட்டப்பெற்றனர். [ஜ]

## சுன்னாகம் பிரஜைகள் குழுக் கூட்டம்

(சுன்னாகம்)

சுன்னாகம் தபால் நிலையச் சீர்கேடுகளை விசாரிக்கவும், மின்சார விநியோகத்தினைச் சீர் செய்யவும் சுன்னாகம் பிரஜைகள் குழு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து சுன்னாகம் பிரஜைகள் குழுக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

அண்மையில் இக்குழுவின் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது பிரஜைகள் குழுத் தலைவர் திரு தி. மாணிக்கவாசகர் இவற்றைத் தெரிவித்தார்.

அகதிகளுக்கு நிவாரணம் வழங்க ஒன்பது பேர் கொண்ட குழுவும் இக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டது.

## முற்போக்கு கலாமன்றத்தின் 'மலரும் புதுயுகம்'

(யாழ்ப்பாணம்)

முற்போக்கு கலாமன்றத்தினர் 25 தடவைகளிற்குமேல் மேடையேற்றி மக்களின் பேராதரவைப் பெற்றவரும் கான நிகழ்ச்சியும் மலரும் புதுயுகம் நாடகமும் யாழ் மாவட்டத்தில் பரவலாக பல இடங்களில் நடைபெற்று வருகிறது.

சமகாலப் பிரச்னையை கருப்பொருளாகக் கொண்ட கவிதைகளும் ''எரியும் தேசத்தின் சுவாலையில் எழுந்த'' பாடல்களும் இணைந்து இந் நாடகத்தை மெருகேற்றிவருவது குறிப்பிடத்தக்கது. (ச)

## முதலில்

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

வளர் திரு. வை. பாலகிருஷ்ணன் பனைத்தரிப்பு பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் திரு சபா நாராயணன், பனைத் தரிப்பு ப. நோ. க. தலைவர் திரு ஆ. ஜேசுதாசன் ஆகியோர் உட்பட மற்றும் பலர் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

## "பிரபு பெரியபரிகாரியார்
# தமிழ்வைத்தியர்பெருமையை உலகறியச் செய்தார்"
### யாழ். மேலதிக அரசஅதிபர் உரை

(யாழ்ப்பாணம்)

தமிழ் வைத்திய திறமை யாலும் தனக்குள்ள ஆற்றலாலும், அந்நிய ஆட்சியிலும் தமிழ் வைத்தியர் பெருமையை உலகறியச் செய்தவர் பிரபு பெரிய பரிகாரியார் ஆறுமுகம் பிள்ளை என்று பிரபு பெரிய பரிகாரியார் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. கா. இராமநாதன் கூறினார்.

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் திரு ந. அருணை ஆனந்தன் தலைமையில் நடந்த இவ்விழாவில் குலசேகரம் என்ற விஷ வைத்திய நூலையும் அவர் வெளியிட்டு வைத்தார்.

பேராசிரியர் திரு. கா. சிற்றம்பலம், பேருரை நிகழ்த்துகையில் வைத்தியத்துறையின் திறமையில் சித்தியின் ஆயக்கூ ஒப்பாரும் மிக்காருமின்றி விளங்கியவர், சுழிபுரம் பெரிய பரிகாரியார் ஆறுமுகம்பிள்ளை என்று கூறினார் இவர்போன்ற பெரியார் பிறந்திலரேல், அந்நியர் ஆட்சியில் தமிழரின் கலைகள் அழிந்திருக்கும் என்றும் கூறினார்.

சிவநர்மவள்ளல் க. கனகராசா முதல் பிரதியை பெற்றதுடன் மூலிகைகளையும் நாட்டினார், கல்லூரி அதிபர் தமிழ் மதி க. ஆறுமுகதாசன் மூலிகை கண் காட்சியை திறந்து வைத்தார். புலவர் வேலமுருகன் ஞாயமார்ந்த சொற்பொழிவை நிகழ்த்தினார். டாக்டர். எஸ். வி. செல்லையா நூலாய்வுரை நிகழ்த்தினார். டாக்டர். வே பாலசுப்பிரமணியம், மூலிகைகள் பற்றிய விளக்கமளித்தார்; டாக்டர் பி. கைலாயநாதன் நன்றி கூறினார். (க)

---

## "இடம்பெயர்ந்து வந்தோர் அகதிகள் அல்ல எமது சகோதரர்கள்!"

(யாழ்ப்பாணம்)

அரச படைகளின் நாச வேலைகளினால் இடம்பெயர்ந்து இங்கு வந்துள்ள தமிழ்மக்களை அகதிகள் அல்லர். எம்சகோதரர்களே இந்த சகோதர உணர்வு எங்களிடம்இருந்தால் எமது இனத்துக்கு விரைவில் நல்வாழ்வு கிடைக்கும்.

இவ்வாறு திருமலையில் இருந்து இடம் பெயர்ந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்து வாழும் தமிழ் மக்களை சிலமாத பராமரிக்கின்ற நவாலி அகதி முகாமுக்கு உணவுப் பொருட்களை வழங்கிய ஸ்தாபனங்களுக்கு நன்றி தெரிவிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட வைபவத்தில் உரையாற்றும் போது நவாலிபிரஜைகள் குழுவின் செயலாளர் திரு. யோ. சின்னத்துரை குறிப்பிட்டார்;

இவ்வைபவம் நவாலி வை. எம். சி ஏ. மண்டபத்தில் நடைபெற்றது;

இவ்வைபவத்தில் நவாலி பிரஜைகள் குழு உறுப்பினர் திரு. உ. ந. தேவகடாட்சம் உரையாற்றுகையில் எமது தமிழ் அகதிகள் அனுபவிக்கும் கஷ்டங்களை நாம் உணர்கிறோம்: அவர்களை எமதுகுடும்பத்தவர்கள் என்றஉணர்வுடன் பராமரிப்போம் என்றார்.

மில்க்வைற் தொழிலகம், முருகானந்தா சனசமூக நிலையம், பிற்றர் சனசமூகநிலையம், முரசொலி சனசமூக நிலையம் திருச்சபை போன்ற பல ஸ்தாபனங்கள் பணம், பிறஉணவுப் பொருட்களை வழங்கி இருந்தன; (ஐ)

---

# அகதிகளின் நலன்காக்க சிறப்புமிகு நடவடிக்கைகள்!
## திட்டமிடல் உத்தியோகத்தர்கள் இன்று முதல் சேவையாற்றுவர்

—கா. யோகநாதன்—

"யாழ். மாவட்டத்திலுள்ள 18 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும், அகதிகளின் நலனை கவனிக்க திட்டமிடல் பகுதி உத்தியோகத்தர்கள் இன்று வெள்ளிக்கிழமை முதல் கடமையாற்றுவார்கள் யாழ் மாவட்டத்திற்கு அகதிகளாக வருபவர்கள் இன்று அவர்கள் தங்கியிருக்கும் பகுதியிலுள்ள உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் வழங்கப்படும் புதிய பத்திரத்தை பூர்த்தி செய்து கிராம சேவகர்களிடம் ஒப்படைத்து நிவாரணத்தை பெற்றுக் கொள்ளலாம்"

யாழ். அரசாங்க செயலகத்தில் நேற்று மாலை நடந்த யாழ் மாவட்ட உதவி அரசாங்க அதிபர்கள் கூட்டத்தில் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திரு சு. சிவதாசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்

யாழ் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் தலைமையில் நடந்த கூட்டத்தில் யாழ். மாவட்டத்திற்கு வந்து கொண்டிருக்கும் அகதிகள் பற்றி ஆராயப்பட்டது.

ஏற்கனவே பத்திரங்களைப் பூர்த்தி செய்துள்ள அகதிகள் மீண்டும் புதிய பத்திரங்களை வாங்கிப்பூர்த்தி செய்யத் தேவையில்லையென்றும் உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் உள்ள உத்தியோகத்தர்கள் அந்த வேலையைச் செய்வார்கள் என்றும் திரு. சிவதாசன் தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்திற்கு நேற்று வரை திருகோணமலை, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களிலிருந்து 3414 அகதிகள் குடும்பங்கள் வந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்

உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக அகதிகள் குடும்பங்களின் தொகை வருமாறு; யாழ்ப்பாணம் - 275, நல்லூர் - 211, பருத்தித்துறை -1020, கரவெட்டி -215, தெல்லிப்பழை - 114, கோப்பாய் - 254, உடுவில் - 155, சாவகச்சேரி - 179, சண்டிலிப்பாய் - 135, சங்கானை ... - 186, வேலணை - -367, ஊர்காவற்றுறை - 178, நெடுந்தீவு - 25.

உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில், நாளை முதல் தினமும் கடமையாற்றவுள்ள திட்டமிடல் பகுதி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அகதிகளுக்கு தேவையான சகல உதவிகளையும் செய்வார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ் மாவட்டத்திற்கு வந்துள்ள அகதிகளில் மூன்றில் ஒரு பகுதியினர், பருத்தித்துறையில் தங்கியிருப்பதாகவும், பெருமளவு அகதிகள் திருகோணமலையிருந்தே வந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அகதிகளுக்கு நிவாரணம் அளிப்பதில் எவ்வித காலதாமதமும் இருக்காதென்றும், மேலும் தெரிவிக்கப்பட்டது. (க)

---

## திருநெல்வேலி சனசமூக நிலையம்

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலி காளிகோவிலடி சன சமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெறவுள்ளது. நிலைய மண்டபத்தில் திரு. க. தியாகலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் இக் கூட்டத்தில் புதிய உத்தியோகத்தர் தெரிவு இடம்பெறும்.

---

## நிர்வாகிகள்

மருதங்கேணி இந்து வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச் சபைப் பொதுக்கூட்டம் அண்மையில் வித்தியாலய அதிபர் திரு பி. சங்கரப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது பாடசாலை அபிவிருத்தி சம்பந்தமான சில முக்கிய தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

பின்வருவோர் நடப்புவருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: பி. சங்கரப்பிள்ளை (அதிபர்), உபதலைவர்: வே- சுப்பிரமணியம், செயலாளர்: செ நற்குணம், உபசெயலாளர்: பொ. தனபாலசிங்கம், பொருளாளர்: திருமதி ச. நடராஜா, நிர்வாகசபை உறுப்பினர்கள்: க. சுப்பிரமணியம், பொ. பாக்கியராசா, க. பாலச்சந்திரன், சி. கந்தசாமி, க துரைசிங்கம், வி. எஸ். மயில்வாகனம், கணக்கு பரிசோதகர்கள் சி சிறீதரராசா, மு. சண்முகலிங்கம், இ. தங்கராசா;

---

## மூலைமுடுக்கெல்லாம் இறைச்சிக் கடைகள்!
### சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

"யாழ் மாநகரஎல்லைக்குள் சந்திக்கு சந்தி மூலைக்குமூலை வீட்டுக்கு வீடு ஆட்டிறைச்சி மாட்டிறைச்சிக்கடைகள் அங்கீகாரம் பெறுமல் ஆரம்பிக்கப்பட்டுவருவதால் அங்கீகாரம்பெற்று இறைச்சிக்கடை நடத்துபவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்"

யாழ். மாவட்ட மாட்டிறைச்சி வியாபாரிகள் சங்கத் தலைவர்கள் ஜனாப் திரு எஸ் ஏச். கமால் செயலாளர் திரு க சி. கிருஷ்ணன் ஆகியோர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு கண்டனம் தெரிவித்துள்ளனர்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

அங்கீகாரம் பெற்ற கடைகளில்தான் எங்கள் சங்கத்தினர் இறைச்சி விற்பனை செய்து வருகின்றனர்.

85 மார்ச் 9ல் யாழ் மாநகர சபை கட்டடம்தகர்க்கப்பட்ட நாள் முதல் மாநகரசபை சுகாதாரப்பகுதி பரிசோதகர்கள் பதவிற்றதின் காரணமாக வழக்கம்போல் கடமை செய்ய முடியாத நிலை இருந்து வந்தது. மாடுவெட்டும் இடத்திலும் சுகாதாரப்பகுதி ஊழியர்களின் கடமை பதவிற்றதின் காரணமாக தடைப்பட்டு வந்தது. இதனால் நாங்கள் வழக்கம்போல் வியாபாரம் செய்ய முடியாதநிலை ஏற்பட்டது இதேசமயம் பலஇடங்களில் அங்கீகாரம் பெறாத இறைச்சிக்கடைகள் உருவானது.

"அங்கீகரிக்கப்படாத இறைச்சிக் கடைகளினால், எமது சங்கத்தினருக்கு ஏற்பட்ட பாதிப்புக்களை சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு தெரிவும் கடிதமூலமும் தெரிவித்துள்ளோம்" (க)

---

## மோட்டார் சைக்கிள் கடத்தல்
# ஈழ. ம. பு. வி. முன்னணி பிரசுரம் மூலம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

அன்றாட பாவனைக்காக உபயோகித்துக்கொள்ளும் வாகனங்கள் பிரதானமாக மோட்டார் சைக்கிள்கள் கடத்தப்படுவதைக் கண்டித்து ஈழ மக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணி [ஈ. பி. ஆர். எல். எவ்] பிரசுரம் ஒன்றைவிடுத்துள்ளது.

அப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"ஈழவிடுதலைப்போராட்டத்தின் இன்றைய வளர்ச்சிக்கு ஆயிரக்கணக்கான போராளிகளின் அர்ப்பணிப்பும் தியாகமும் காத்திரமான பங்களிப்பைச் செய்கின்றன என்பது உண்மையே; இத்தகைய ஆயப்போராளிகளை நிலை கொண்டிருந்த மக்கள், அவர்கள் ஆற்றிய அளப்பரிய பங்கும்கூட அதே அளவு முக்கிய குலைக்தோடு நோக்கப்படவேண்டியவையே; உதவிகளைக் காட்டிக் கொடுக்கும் தேசத்துரோகிகளும், தேசப்பொறுப்பற்ற நபர்களும் இலக்கின்றபோதிலும் பாதிக்கப்பட்ட மக்கள் என்ற வகையில் இப்பாரகரா ... சொற் மாணவர்களே இப் போராட்டத்தின் விளைவாக ஆயுதந்தாங்கிய பட்டாளங்களால், நிராயுதபாணியான மக்கள் அனுபவித்த துயரங்கள், துயரங்கள் உயிர் உடமை இழப்புகள் எண்ணிக்கையடங்காதவை, எழுத்தில் வழங்க முடியாதவை மொத்தத்தில் மக்களினதும் போராளிகளினதும் ஒன்றிணைந்த செயற்பாடே ஈழப் போராட்டத்தின் இன்றைய வளர்ச்சிக்கு உரமாய் அமைந்தவையாகும்;

"ஆகவே மக்களின் பாதுகாப்பு மக்களின் தேவைகள், மக்களின் நலன்கள் இவற்றை மதிக்காத, அவற்றினை மீறிய போராளிகளின் நடத்தைகள் யாவும் போராட்டத்திற்கும் மக்களுக்கும் தீங்கானவையாகும். இத்தகைய நடத்தைகளுக்கு பல உதாரணங்களை எடுத்துக் காட்டமுடியும்;

"இத்துண்டுப் பிரசுரத்தில் நாம் பிரதானப்படுத்துவது மோட்டார் சைக்கிள் கடத்தலையே ஆகும். அன்றாடப் பாவனைக்காக உபயோகித்துக் கொள்ளும் வாகனங்கள் பிரதானமாக மோட்டார் சைக்

(11ம் பக்கம் பார்க்க)

---


NATIONAL CERTIFICATE IN ENGLISH EXAM.

எமது இளம் சந்ததியினரின் எதிர்கால சுபிட்சத்திற்காக மேற்படி பரீட்சைக்கான

Week-end Lectures 12-10-85ல்

ஆரம்பமாகவுள்ளன.

காலம் 4 மாதங்கள் முழுக்கட்டணம் ரூபா 125/-

ஆசிரியர் பிரபல ஆங்கில விரிவுரையாளர் கந்தையா நவரேந்திரன்

தகைமை:
G. C. E. (O/L) ஆங்கில பாடத்தில் சித்தி அல்லது அதற்கு இணையான ஆங்கில அறிவு

அச்சடித்த பாடக்குறிப்புகள் Free.

மேலும் விபரங்களுக்கு:

CANTABIA INSTITUTE
21, Main Street, Jaffna.
Phone: 24201...

# "நமதுவிவசாயபயிர்கள்பற்றி ஆராய்ச்சி நடத்த வேண்டும்"

## கருத்தரங்கில் கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

"எமது தமிழ்ப் பிரதேசங்களில் நன்றாகவளரக்கூடிய பயிர்வகைகள் பற்றிய ஆராய்ச்சிகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. அரசின் மாற்றாந்தாய் மனப்பான்மையே இதற்கு காரணமாகும் என்பது விவசாயிகள் தங்கள் சுயமுயற்சியாலும் அனுபவத்தினாலுமே விவசாயத்தில் முன்னேற்றம் கண்டு வந்துள்ளனர். புதிய விவசாயப் பயிர்கள் பற்றிய ஆராய்ச்சிகள் செய்யப்படும் பட்சத்தில் எமது வடபகுதி விவசாயிகள் மேலும் அதிக வருமானத்தையும் உற்பத்தியையும் பெற முடியும்."

இவ்வாறு ஒய்வு பெற்ற விவசாய திணைக்கள பிரதிப் பணிப்பாளரும் தென்னாலியா நாட்டில் பல்கலைக்கழகத்தின் பேராசிரியராக கடமையாற்றியவருமான திரு. எஸ். சதாசிவம்பிள்ளை பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற விவசாயக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

சாவிப்பாய் மறுமலர்ச்சி மன்றம் பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்தியஇந்தக் கருத்தரங்கிற்கு திரு. பொ. செல்வரத்தினம் தலைமை வகித்தார். பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. சபா. நாராயணன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

திரு. சதாசிவம்பிள்ளை ஆங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:- யாழ்ப்பாண பிரதேசமான எமது வடபகுதியில் நன்றாக விளையக்கூடிய பயிரினங்கள் பற்றிய நவீன விஞ்ஞான முறையிலான ஆராய்ச்சிகள் நடாத்தப்படவேண்டியது அவசியமானதாகும். குறிப்பாக தென்னிந்தியாவில் விளையக்கூடிய தெல்லரிக்கைகள் ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்டு சிபாரிசு செய்யப்படவில்லை. தென்னிலங்கையின் கலைகழகம் பேராதனை நெல்வகைகளின் ஆராய்ச்சி மூலம் கண்டு பிடிக்கப்பட்டு சிபாரிசு செய்யப்பட்டிருப்பதினால் அவர்கள் அதிக உற்பத்தியை பெறுவதை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.

இந்தவேளை தென்னிந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் அங்குள்ள சுவாத்தியத்திற்கேற்ப புதிய பயிரினங்கள் ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன முருங்கை, வாழை, புளியமரம் ஆகியன ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு புதிய நல்ல இனங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இந்த பயிரினங்கள் எமது யாழ். மாவட்டத்திற்கு நன்குவளரக் கூடிய பயிரினங்களாகும். அங்கு இதற்கென மாநில அரசு இருப்பதால் அப்பகுதி மக்களின் விவசாயப் பிரச்னைகள் தீர்த்துவைக்கப்பட்டு வருகின்றன.

சிவதர்மவள்ளல் திரு. க. கனகராசா ஜே. பி. இந்த கருத்தரங்கில் கலந்துகொண்டு மரக்கன்றுகளையும், இலவச பிரசுரங்களையும் அன்பளிப்பாக வழங்கினார். யாழ். பிரதேச விவசாய உதவிப்பணிப்பாளர் திரு. ச. கிருஷ்ணபிள்ளை பயிர்க்காப்புறுதி உதவிப் பணிப்பாளர் திரு. எஸ். சிவகுரு, பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கத்தலைவர் திரு. ஆ. யோகராசா யாழ். பல்கலைக் கழக வைத்தியபீட விரிவுரையாளர் (மிருக வைத்தியம்) திரு. டி. குணராசசிங்கம் ஆகியோர் உட்பட மற்றும் சிலர் இக்கருத்தரங்கில் உரை நிகழ்த்தினார்கள். இறுதியில் மன்றச் செயலாளர் திரு. செ. யோ. செல்வராசா நன்றியுரை நிகழ்த்தினார்.

# "கலைஞர்கள் கல்விமான்கள் போற்றப்பட வேண்டியவர்கள்"

(உடுவில்)

"கலைஞர்கள், கல்விமான்கள் ஆன்றோரை பண்டைக்காலம் தொட்டு மன்னர்களும் சமயஸ்தாபனங்கள், தேவஸ்தானங்கள் ஆகியனவும் போற்றிவந்துள்ளன. இதனால்தான் நமது சைவமதமும் கலை கலாச்சாரங்களும் இன்றும் நிலைத்துள்ளன உடுவில் வாழ சைவ மக்களின் சமய நெறியை வளப்படுத்தவும் தத்துவ கிரியாபார கலாசார விளக்கங்களைப் போற்றவும், இளைஞரிடையே சமய உணர்வை பேணவும் இன்று ஆரம்பமாகும் இச்சமய வாரியம் நிலைத்து நின்று உதவ வேண்டும்"

உடுவில் ஸ்ரீ சிவஞானப் பிள்ளையார் கோவில் விநாயக சதுர்த்தியிலன்று சைவசமயப் பணிமன்றம் ஒன்றை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் பிரம்ம ஸ்ரீ வீரமணி ஐயர் மேற்கண்டவாறு கூறினார்.

கோவில் ஆதினகர்த்தா பிரம்ம ஸ்ரீ வா. முத்துக்குமாரசாமி சர்மா தலைமையில் இவ்வங்குரார்ப்பணம் நடைபெற்றது.

இளம் சைவப் புலவர் திரு என் ஸ்ரீ தயாளனின் சமயப் பணியினை கௌரவித்து பாராட்டுப் பத்திரம் ஒன்றும் ஸ்ரீ வீரமணி ஐயரால் வாசித்து வழங்கப்பட்டது.

அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட சைவ சமயபணி மன்றம் "சிவஞானவாரியம்" என அழைக்கப்படும் என முடிவு செய்யப்பட்டது.

சிவஞான வாரியத்தின் நடப்பு ஆண்டு உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் பிரம்மஸ்ரீ வா. முத்துக்குமாரசாமி சர்மா உபதலைவர் திரு. ஆர். சச்சிதானந்தம் செயலாளர் திரு சி, ஸ்ரீ தயாளன், பொருளாளர் செல்வி புனிதம் கந்தையா: எட்டுபேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

# இன்றைய பலன்

மாதம்: புரட்டாதி
திகதி: 25 (11-10-85)
கிழமை; வெள்ளி
திதி: துவாதசி
நக்ஷத்திரம்: மகம்

மேடம்: பிதா வழியிலிருந்து மகிழ்ச்சிகரமான செய்திகிட்டமுண்டு. சமூகத்திலும் மதிப்பு உயரும். புதிய தொழில்வாய்ப்பும் உண்டாம்.

இடபம்: புதுமனை கட்டுவதற்கும் சிலர் ஆலோசிக்கலாம். கல்வியில் சிறப்புமுண்டு. வாழ்க்கை இன்று மகிழ்ச்சியாகச் செல்லும்.

மிதுனம்: வாழ்வுப் பாதையில் வளமான திருப்பம் தென்படும். மேலதிகாரியின் ஆதரவைப் பெறுவார்கள் எடுத்த காரியச் சித்தியுமுண்டு.

கடகம்: செய்தொழிலில் கிரமங்கள் தோன்றலாம வாழ்விலும் பெரும்பிளவுகள் தென்படும் சிலருக்கு நூதனரோகமும் தென்படலாம்.

சிங்கம்: பொருள் துறையில் எதிர்பாராத நெருக்கடிகள் தோன்றும்: புதிய முதலீடுகளைத் தவிர்த்துக்கொள்ளவும். போட்டி மனப்பான்மையைத் தவிர்த்துக்கொள்ளவும்.

கன்னி: குடும்ப வாழ்வில் மனநிறைந்த நிம்மதி பிறக்கும். நீண்டநாள் பூமிப்பிணக்கு நிவர்த்தியாகலாம். புதுமையான எண்ணங்களும் தலைதூக்கலாம்

துலாம்: குடும்பத்திலும் சிறுபூசல்கள் தோன்றலாம். உதவி செய்யப்போய் குறை கேட்கநேரிடும். புதிய தொழில்களை இன்று பிற்போடவும்.

விருச்சிகம்: நீண்ட நாள் கடன் இன்று நிவர்த்தியாகலாம்: பொதுசன தலைமையுமுண்டு. கடமையும் விருத்தியாகும்.

தனுசு: திதியில் நல்ல அபிவிருத்தி காணப்படும். பிறருடைய ஆதரவு கிடைக்கும் அதிகாரச் சந்திக்குமிடமுண்டு.

மகரம்; திரைமறைவிலிருந்து திட்டம் உருவாகும். பூமிப் பிணக்கும் தலைதூக்கி நிற்கும். அவசரமுடிவைத தவிர்க்கவும்.

கும்பம்: சாஸ்திர வழியாலும் நன்மைகிட்டலாம்: காதல்களை தாக்கும். புதிய உறவுகள் பலப்படும். புண்ணிய விருட்புல் கேலிடும்.

மீனம்: வீண் அச்சம் எதிரிகள் காத்திருப்பர் வாழ்விலும் அவப்பெயர் கிட்டும்: எவ்விடயத்தையும் நன்கு ஆராய்ந்து செயல்படவும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## வாகனங்களை திருப்பி ஒப்படைக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பல அபிவிருத்திச்சபையின் வாகனக்கடத்தல்களினால்சபையின் செயற்பாடுகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளன.

இது தொடர்பாக நடைபெற்ற மேற்படி சபையின் இயக்குனர்சபைக் கூட்டத்தில் தமிழ்பேசும் மக்களின் நலனைக் கருத்திற்கொண்டும் பல உற்பத்தியுடன் சம்பந்தப்பட்ட பல்வேறு நிறுவனங்களின் நலனைக் கருதிற்கொண்டும். சபையின் திட்டமிட்ட செயற்பாடுகளைத் தொடர்ந்து செய்வதற்கு வசதியாக அண்மையில் கடத்தப்பட்ட சபையின் வானையும் லொறியையும் மீள ஒப்படைக்குமாறு பொது வேண்டுகோள் விடுவதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ச)

யாழ். கனகரத்தினம்
மத்திய மகா வித்தியாலயம்
தரம் 6 (ஆண்டு ஏழு)
பிரவேசம் — 1986

விண்ணப்ப முடிவு திகதி 30-10-85
பரீட்சைத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்
பரீட்சையில் சிறப்புச் சித்தியெய்தும்
முதல் மூன்று மாணவர்களுக்குப்
பரிசில் வழங்கப்படும்.
பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களுக்கான
மோட்டார் யந்திரவியல் பாடநெறி
1986 தை மாதம் ஆரம்பமாகும்.
அதிபர்.

(1187)

LANKA CEMENT LIMITED
KANKESANTHURAI
ஏல விற்பனை

1985-10-13 ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணி முதல் 12-00 மணிவரை பாவிக்கப்பட்ட துண்டுக் கம்பிகள், முறுக்குக் கம்பிகள் "ஆங்கில் அயன்", எச். ஐ. வடிவ உருக்குத் திராந்திகள் என்பன லங்கா சீமெந்து லிமிட்டெட் தொழிற்சாலையில் ஏல விற்பனைக்கு விடப்பட்டுள்ளன.

மேற்படி பொருட்களைப் பார்வையிட விரும்பும் கொள்வனவாளர்கள் 1985-10-12-ம் திகதி சனிக்கிழமை தொழிற்சாலை வளவில் பார்வையிடலாம்.

பொருட்களின் விலையின் 3-ம் கூற்று முடிவடைந்த உடன் மொத்தத்தொகையின் 1/3 பணம் கொள்வனவாளரால் செலுத்தப்பட்டு மிகுதி அடுத்த 24 மணி நேரத்தில் செலுத்தப்படவேண்டும்.

பொருட்கள் பகுதி பகுதியாகக் கொள்வனவு செய்வோர் கூறப்பட்ட திகதியான 13-ம் திகதி ஒக்டோபர் 1985-ல் இருந்து 02 நாட்களுக்குள்ளும், முழுக் கூறுகளும் ஒன்றாகக் கொள்வனவு செய்வோர் மேற்படி கூறப்பட்ட திகதியில் இருந்து 5 நாட்களுக்குள்ளும் தொழிற்சாலை வளவில் இருந்து விற்கப்பட்ட பொருட்களை அகற்றவேண்டும்.

பொதுமுகாமையாளர்
லங்கா சீமெந்து லிமிட்டெட்.

லங்கா சீமெந்து லிமிட்டெட்.
காங்கேசன்துறை.
1985-10-07.

(1145)

BECON (ஸ்ரீதர் சினிமா முன்பாக)
யாழ்ப்பாணம்.

தூயபிரயோக கணிதம் — திரு. நல்லையா

86 87 A/L சனி, 8-15
ஞாயிறு 11-30

DAY CLASS
MATHS — திரு. நல்லையா
பௌதிகம் — திரு. யோகேந்திரா
— திரு. சௌந்தி

86 87 A/L ஆரம்பம்
12-10-1985

# போர் நிறுத்தம் ஈழ. தே.வி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பூர்வமாக அறிவிக்கப்பட்டது. அதே நேரத்தில் யுத்த நிறுத்தத்தை கண்காணிக்கும் குழுவில், ஈழ தேசிய விடுதலை முன்னணி இலங்கை அரசுக்கு சமர்ப்பித்திருந்த பெயர்ப்பட்டியலில் உள்ள சிலரையும் சேர்ப்பதென்று இலங்கை அரசு தீர்மானித்திருப்பதாக நேற்றிரவு புதுடில்லியில் இலங்கைத் தூதரகம் உத்தியோகபூர்வமாக வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தமிழ்க்கைதிகள் காவலில் வைக்கப்பட்டிருக்கும் சிறைச்சாலைகள் முகாம்களை கண்காணிப்புக் குழு சென்று பார்வையிடவும், கண்காணிப்புக்குழுவின் கண்டு பிடிப்புகளை ஜனாதிபதிக்கு சமர்ப்பித்து, ஜனாதிபதி மக்கள் முன்னிலையில் சமர்ப்பிக்கவும் இலங்கை அரசாங்கம் இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

வன்செயல் காரணமாகத் தமது இடங்களை விட்டு வெளியேறியவர்கள் மீண்டும் தங்களது இருப்பிடங்களுக்குத் திரும்ப அனுமதிப்பதென்றும், அவர்களுக்குப் போதிய பாதுகாப்பு வழங்குவதென்றும் இலங்கை அரசு உடன்பட்டுள்ளதாகவும், இராணுவ அத்துமீறல் மற்றும் போர் நிறுத்த மீறல்களை உடனடியாக நிறுத்த இணக்கம் கண்டுள்ளதாகவும் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இதே வேளை இலங்கையில் யுத்த நிறுத்தத்தை நீடிப்பது, கண்காணிப்புக் குழு ஆகியன தொடர்பாக தமிழ் விடுதலை இயக்கங்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியும் இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரியுடன் நடத்தப்பட்ட ஒருவார கால பேச்சுக்கள் நேற்றுடன் முடிவடைந்தது.

திரு. ரொமேஷ் பண்டாரி இந்தியப் பிரதமருடன் வெளிநாடு செல்வதன் காரணமாக இப்பேச்சுக்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மீண்டும் இப்பேச்சுக்கள் இம்மாத இறுதியில் பண்டாரி நாடு திரும்பியதும் நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஈழம் தேசிய விடுதலை முன்னணி, தமிழீழமக்கள் விடுதலைக் கழகம், தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரதிநிதிகள் இன்று புதுடில்லியிலிருந்து சென்னை திரும்புவார்கள்.

## இடம்பெயர்ந்த...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட ஊழியர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

திருகோணமலை, வவுனியா ஆகியமாவட்டங்களில்போக்குவரத்துவசதி, தங்குமிடவசதி எல்லாவற்றுக்கும் பொதுவாகப் பாதுகாப்பு வசதியின்மையால் ஊழியர்கள் அங்கு செல்ல அச்சம்தெரிவிக்கின்றனர்.

இது சம்பந்தமாக பொது நிர்வாக அமைச்சரைச் சந்தித்து தமது கஷ்ட நிலைமையைஎடுத்துச்சொல்வதற்கு யாழ். பிரஜைகள் குழுத்தலைவரின் உதவியைப்பாதிக்கப்பட்ட ஊழியர்கள் கோரியுள்ளனர்.

(சுண்டு.நி. மா)

## கிளிநொச்சி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாங்க அதிபர் மற்றும் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார் எனவும் தெரியவந்துள்ளது.

பொலிஸ்-இராணுவ கூட்டு முகாம் விஸ்தரிப்பின் முன்னேடியாக பொலிஸ் நிலையம் முன்பாக 'ரெட்றிக்கோ' மைதானத்தில் அமைந்துள்ள பொது நூலகம், பட்டினசபை அலுவலகம் கரடிப்போக்கு சந்திக்கு இடமாற்றம்பெறவுள்ளதாகத் தெரியவருகிறது. கிளிநொச்சி பிரதமதபால் அலுவலகத்தின் அருகில் அமைந்துள்ள கடைகளிலிருந்து பொருட்களை அப்புறப்படுத்தும் முயற்சியில் தற்போது வர்த்தகர்கள் ஈடுபட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக கிளிநொச்சியில் சுமார் 200 வர்த்தகர்கள் பாதிப்படைந்துள்ளனர். மேலும் பல அலுவலகங்கள் தொடர்ந்து அதம்பிதநிலையில் உள்ளன சேதப்படுத்தப்பட்ட கிளிநொச்சி மத்திய பொதுச்சந்தை இயங்கமுடியாததையடுத்து இதுவரை திறக்கப்படாதிருந்த நவீன சந்தையை பொதுமக்கள் நலன்கருதி திறக்க மாவட்ட அரசாங்க அதிபர் திரு. என் ஜெபநாதன் நடவடிக்கை எடுத்துள்ளார். பொலிஸ் நிலையத்தாக்குதலை அடுத்து மத்திய பஸ்நிலையமும் செயற்படமுடியாத நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இதனை அடுத்து மத்திய பஸ் நிலையத்தை கிளிநொச்சி கந்தசாமி கோவிலுக்கு அண்மையிலுள்ள பழைய பஸ் நிலையத்திற்கு மாற்றவும் ஆலோசனைகள் நடைபெற்றுவருகின்றன

தற்போது பழைய பஸ் நிலையத்தில் இருந்தே பிரயாணிகள் தமது பிரயாணத்தை மேற்கொள்கின்றனர்.

தற்காலிக சந்தைகள் பழைய பஸ் நிலையம். திருநகர் கிராம முன்னேற்றச் சங்கம். உதயநகர் ஆகிய இடங்களில் ஆரம்பித்துள்ளன. இதைத் தொடரும் நிலையினை அடுத்து நகரிலிருந்து பெருமளவு பொதுமக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலய கோஷ்டிக்கும், வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய கோஷ்டிக்குமிடையில் இன்று யாழ் கனகரத்தினம் மகா வித்தியாலய மைதானத்தில் உதைபந்தாட்டப் போட்டி யொன்று நடைபெறவிருக்கிறது. (க)

## பேராதனை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து பேராதனை சென்றடையவுள்ள இரு பஸ்களில் ஒன்று 14ம் திகதி காலையும், மற்றது 15ம் திகதி காலையும் பேராதனைக்குச் செல்வதற்கு வசதிசெய்யப்பட்டுள்ளது.

இப்பிரயாணத்தில் பங்குபற்றவுள்ள அனைவரினதும் பெயர்ப்பட்டியல் யாழ். அரசஅதிபர் மூலமாக இராணுவத் தளபதிக்கு அனுப்பப்பட்டு அவரது அனுமதி பெறப்பட்டுள்ளது. பிரயாணிகளுக்கு உதவியாக யாழ். செயலக ஊழியர்களும் செல்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

பிரயாணம் செய்வதற்காக தங்கள் பெயர்களைப் பதிவு செய்து இதுவரையும் பணம் செலுத்தாதவர்கள் பிரயாணத்தினத்தன்று (13ம் திகதி) பணத்தைச் செலுத்திபிரயாணத்தை மேற்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் பின்வரும் இடங்களில் குறிப்பிடப்படும் நேரத்தில் பஸ்களில் ஏறமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கோண்டாவில் பஸ் டிப்போ: 6-00; யாழ். பஸ் நிலையக் காரியாலயம் முன்பாக: 6-15; சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பணிமனை: 6-30; கொடிகாமம் புகையிரத நிலைய முன்றல்: 6-45.

மாணவர்கள் காலை, மதிய போசனங்களையும், குளிர்பானவகைகளையும் கொண்டுவருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இத்தேவைகளுக்காக பஸ் நிறுத்தப்படமாட்டாது

இந்த ஏற்பாடுகளைச் செய்தமைக்காக மாணவர்குழு அரசாங்க அதிபர், கோண்டாவில் பஸ்சாலை முகாமையாளர், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஆகியவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துள்ளனர். (மா)

## ராஜீவுக்கு கோரிக்கை

(சென்னை)

"பஞ்சாப் பிரச்னைக்குத் தீர்வு கண்டதுபோல் இலங்கையின் இனப்பிரச்னைக்கும் இந்தியப்பிரதமர் திரு. ராஜீவ் காந்தி தீர்வுகாண வேண்டும்" என்று தமிழ்நாடு சர்வோதய மண்டல் மகஜர் மூலம் இந்தியப்பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

## ஆளுநரின் ஆலோசகர் காலமானார்

(சென்னை)

பஞ்சாப் மாநில ஆளுநரின் ஆலோசகர் லெப்டினன்ட் ஜெனரல் கௌரி சங்கர் நேற்றுக் காலை மாரடைப்பால் சென்னையில் காலமானார்.

## வல்வெட்டி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரஜைகள் குழுத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி, செயலாளர் எஸ். குமாரசாமி, பொருளாளர் கே. முருகமூர்த்தி ஆகியோரைக் கொண்ட குழு, இணைப்பதிகாரி வணசிங்கவை நேரில் சந்தித்து, வல்வெட்டித்துறையில் ஆயுதப் படையினர் நடாத்திய வன்முறைச் சம்பவங்கள் குறித்து புகார்செய்தனர்.

90 நிமிடங்கள் நடந்த உரையாடலில் அன்றைய தினம் சுகவீனமுற்றவர்கள், காணாமல் போனவர்கள், கள்ளக்கடத்தல் காரர் பிரச்னைகள் இவ்வுரையாடலின்போது ஆராயப்பட்டது.

குறிப்பாக ஆலடிச் சந்தியைச் சேர்ந்த 7 பிள்ளைகளின் தந்தையான சிதம்பரப்பிள்ளை துரைசிங்கம் (50 வயது) என்பவர் காணாமல்போன நிலைபற்றி இதுவரை எதுவும் தெரியவில்லை என்றும், அவர் இறந்திருக்கலாம் என்று கருதப்படுவதாகவும் பிரஜைகள் குழு எடுத்துச் சொல்லியது இப்பேச்சுவார்த்தையில் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

பிரஜைகள் குழு தெரிவித்த புகார்களை இணைப்பதிகாரி அனுதாபத்துடனும், கவனமாகவும் கேட்டறிந்துகொண்டதாகவும், மேற்கொண்டு எதுவித வன்செயல்களும் இடம்பெறாமல் இருப்பதற்கான உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தங்களிடம் உறுதி அளித்துள்ளதாகவும் பிரஜைகள்குழுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இப்பேச்சுவார்த்தையின்போது யாழ். பொலிஸ் அதிபரும் சமூகமளித்திருந்தார். (மா)

## ஆந்திராவில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது.

முன்னெச்சரிக்கையாக முப்படைகளும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. தாழ்வான பகுதிகளில் குடியிருப்போரைப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அரசு அறிவித்துள்ளதுடன் நிலைமை மோசமடையும் பட்சத்தில் உடனடித் தேவைக்கென உணவு, மருந்து வகைகளையும் அரசு தயார் நிலையில் வைத்துள்ளது. (ரா)

## சுயநலவாதிகளின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யினருக்கு, தமிழ் விடுதலைப் புலிகளிடமிருந்து. இன்று தமிழர்களின் தாயகத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போராட்டம் பற்றி நீங்கள் அறிவீர்கள். எமது தாயகத்தை மீட்டெடுக்கும் முயற்சிகள் சரித்திரத்தில் இடம்பெறும். சிங்கள பேரினவாத அரசபயங்கரவாதிகளின் சூத்திரதாரிகளாக நீங்கள் செயற்பட்டு தமிழ்ப் புரட்சிக்காரர்களைத் தேடித்திரிந்து, மனிதவேட்டை ஆடுகின்றீர்கள்.

"தமிழர்களின் தாயகத்தில் சீருடைகளை அணிந்துகொண்டு கைகளில் ஆயுதங்களை ஏந்தி நீங்கள் வாகனங்களில் வலம் வருவதைக் காண்கிறோம். ஒரு வயதான தாயை, தந்தையை அல்லது மனைவியை, சகோதர சகோதரிகளை நீங்கள் அச்சுறுத்துவதற்கு கைக்கு ஆயுதங்களை ஏந்தியுள்ளீர்கள். சிறிலங்கா அரசிலுள்ள சுயநலவாதிகள் தமது உயர்ச்சிக்காக உங்களை உரமாகப் பாவித்து வருகின்றார்கள். இந்த அரசு எமக்குச் செய்வதைப்போல் மிக விரைவில் உங்கள் சகோதரர்க்கும், இனத்துக்கும் எதிராகச் செயற்படும் அவர்களது சுதந்திரத்தை இல்லாமல் செய்வதற்காக உங்களையே, ஆயுதமாக உபயோகிக்கும்.

"இன்று எங்கள் சுதந்திரத்திற்காக நாங்கள் நடத்தும் புரட்சியின்போது உங்களுடன் போரிடவேண்டி நேரிடுகின்றது. நாங்கள் அரசுடன் போர் புரியும்போது மடிந்துபோவது நீங்கள்தான். சுதந்திரப் போரின் பாதையில் நாங்கள் மடிந்து வீழ்ந்து போகலாம். ஆனாலும் அதற்கு ஓர் அர்த்தம் இருக்கின்றது. கூலிப்படையாக இயங்கும் நீங்கள் இறக்கும்போது உங்கள் மரணத்திற்குப் பெறுமதி ஏதுமில்லை.

"அரச பயங்கரவாதத்தின் கைப்பொம்மைகளாக நீங்கள் தமிழர் தாயகத்தில் வாழும் தமிழ் மக்களின் இலட்சியங்களுக்கும், உயிருக்கும் தீங்கு இழைப்பதற்காக நீங்கள் அரச சொல்லும் வழிகளில் செயற்பட்டு மரணத்தைத் தழுவிக்கொள்ளாதீர்கள். உங்கள் இனத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள பாட்டாளி வர்க்கத்துடன் நீங்கள் ஒன்று சேர்ந்து அரசிற்கு எதிராகப் போரிடும்போதுதான் நீங்களும் நானும் அன்போடு பேசிக்கொள்ளமுடியும். நீங்கள் அவ்வாறு போரிடும் போதுதான் எங்களது இதயதாகமும் உங்களுக்குப் புரியும்". (மா)

## மோட்டார்...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

கிங்கள் 'கண்மண்' தெரியாத முறையில் இராணுவப் பாணியில் கடத்தப்படுகின்றன இத்தகைய நடவடிக்கையில் நாம் ஈடுபட மாட்டோம் என உறுதியளிக்கின்றோம். எமது பெயரைப் பாவித்து மேற்கொள்ளப்பட்ட பல கடத்தல் நடவடிக்கைகளின் விளைவாக இவ்வறிவித்தலை நாம் விடுகிறோம். எமது பேரில் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கைகளை அனுமதிக்க வேண்டாம் எனவும் அதை நமக்கு அறியத்தருமாறும் மக்களை வேண்டுகின்றோம்.

மக்களுக்கும் படைகளுக்கும் இடையிலான உறவு பற்றிய பிரச்சினையை விடுதலை அமைப்புக்கள் ஒழுங்குபடுத்திக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை உணர்கின்றோம். இல்லாத பட்சத்தில் "உருக்கமான வேண்டுகோள்கள்" ஒருநாள் வெறுப்புணர்வாய் வெளிப்படுவதை தடுக்க இயலாது போகும்.

"மக்களை மிஞ்சிய படை மக்களை மீறிய போராட்டம் அழிவுக்கே வழிவகுக்கும் அராஜகமே தலைதூக்கும்" (மா)


உஷா மினி
10-30, 2-30, 4-45; 6-45
THE IRON MONKEY
கராட்டிச் சண்டைப் படம்

எம்பயர்
7 அடித் திரையில்
தினசரி 10-30, 2-30, 6-45.
அமிதாப்பச்சன், மாதவி
கிரப்தார்
(புதிய வெளியீடு)

ராஜ்னி மினி
5"X5" திரைகளில்
8-30, 10-30, 2-30
4-30. 6-30
US VISE
பயங்கர காரோட்டம், சண்டைகள், கொலை, கொள்ளை ஆகிய நிறைந்த திகிலூட்டும்படம்
Adults Only

சரவணபவன்
மினி சினிமா
[4 அடி அகலத்திரையில்]
10-30, 2-30, 4-30, 7-00
Hell Cats Uncommon Vollor
வடவரிசையில்
RUSH
இராணுவ கெடுபிடிகள் தாக்குதல்கள் நிறைந்த படம்.

லிபேர்ட்டி மினி
10-30, 2-30, 4-45; 7-00
WHERE EAGLES DARE
ஜேர்மனியின் ராணுவ முகாமிற்குள் அவர்கள் போலவே உடையணிந்து உள்நுழைந்துமுகாமையே நிர்மூலமாக்கும் சிறந்த சண்டைப் படம்.

மனோகரா
வெண்திரையில்
10-30, 2-30, 6-30
டார்லிங்
Darling
டார்லிங்
பாக்யராஜ்-பூர்ணிமா-ஜெயராம்-கல்லாபெட்டி சிங்காரம்
(கலர்)

வெலிங்டன்
10-30, 2-30, 6-30,
பாக்யராஜ் - சுமதி நடித்த
சுவரில்லாத சித்திரம்
[கலர்]

ரீகல் சினிமா
10-30, 2-30, 6-30
சிவகுமார்- ஜெயசித்திரா நடித்த
வெள்ளிக்கிழமை விரதம்
புத்தம் புதிய பிரதி

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# வவனியா காணி சுவீகரிப்பு:
## சிரேஷ்ட தமிழ் அமைச்சர் எதிர்ப்பு

(வவனியா)

வவனியா விமானப் படைத் தளத்திற்கு ஐநூறு ஏக்கர் நிலம் சுவீகரிக்கப்படுவது தொடர்பாக சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் கடும் ஆட்சேபனையைத் தெரிவித்திருப்பதாக அறியப்படுகிறது.

அதேநேரத்தில் மறைந்த வவனியா முன்னாள் எம். பி. திரு. செ. சுந்தரலிங்கத்தின் 'விங்கம் தோட்டமும்' சுவீகரிப்பு எல்லைக்குள் அடங்குவதினால் அவரின் புதல்வியும் சுவீகரிப்பிற்கு ஆட்சேபனை தெரிவித்து ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதியிருப்பதாகத் தெரியவருகிறது.

இதேவேளை மடுக்கந்த என்ற இடத்தில் முகாமிட்டுள்ள இராணுவத்தினர், அயலிலுள்ள தமிழர்களுடைய கிராமங்களுக்குள் புகுந்து தமிழர்களைத் துன்புறுத்துவதாகவும், ஆடு, கோழி, இளநீர் போன்றவற்றை அபகரித்தும் செல்கின்றனர் என்றும் புகார் தெரிவிக்கப்படுகிறது.

---

## அலம்பில் முகாம் அகதிகள்—
# யாழ்ப்பாணம் செல்ல வாகன வசதி இல்லை!

(முல்லைத்தீவு)

அலம்பில் அகதிகள் முகாமில் உள்ளவர்கள் யாழ்ப்பாணம் செல்வதற்கு வாகன வசதி இல்லாததினால் தொடர்ந்து முகாமில் தங்கியுள்ளார்கள்.

இம்முகாமில், திருமலையில் இருந்து வந்த சுமார் 750 குடும்பங்கள் தங்கியுள்ளன.

இவர்களில் 50 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 200 பேர் யாழ்ப்பாணம் செல்வதற்குத் தயாராக உள்ளனர் என்று கூறப்படுகிறது.

இம்முகாமில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதால் புதிதாக அகதிகள் எவரும் அனுமதிக்கப்படவில்லை. புதிய அகதிகள் முல்லைத்தீவு முகாமிற்கு அனுப்பப்படுகிறார்கள். (க)

---

## குமுதினிப் படகுப்—
# பிரயாணிகளைக் கலக்கிய அதிர்வேட்டுகள்

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் இருந்து நேற்றுக் குறிகாட்டுவானை நோக்கி வந்த "குமுதினி" பிரயாணிகள் படகு பாதுகாப்புப்படையினரின் பரிசோதனைக்காக நயினாதீவு பாதுகாப்பு முகாமின் துறைமுகத்தை அடைந்த போது முகாமில் இருந்து அதிர்வேட்டுக்கள் வானை நோக்கிச் சென்றன.

இத்திடீர் வேட்டுச் சத்தத்தால் 'குமுதினி' படகில் பிரயாணம் செய்த நூற்றுக்கும் அதிகமான பிரயாணிகள் நிலைகுலைந்து இது மற்றுமொரு சம்பவமோ என்று அஞ்சினர்.

முகாமில் பயிற்சி நடந்ததென்று பின்னர் தெரியவந்ததும், பிரயாணிகள் படகு பரிசோதனை துறையை விட்டுப் புறப்பட்டதும் வெடிச்சத்தமும் நின்றுவிட்டதாம்.

---

# OBITUARY
## Mrs. V. T. SATGUNAM

The Remains of Victoria Thanganesam (Nee Canagaretna Batticoloa) Beloved wife of the Late P. M. Satgunam, Mother of Manoranee, Yoga, Jeeva (Australia). Mother in-Law of Thanga Muthucumarue Lali (Nee Daniel) and Sharmine [Australia]. Will be Removed for Interment at St. Mary's Burial Grounds, Kopay on Friday. The 11th at 8-30 A M.
"JOE'S NEST" Irupalai - Kopay. (1191)

---

# மரண அறிவித்தல்
## திருமதி தங்கேஸ்வரி சுப்பிரமணியம்
### மீசாலை வடக்கு

தங்கேஸ்வரி சுப்பிரமணியம் 10-10-85 வியாழக்கிழமை மாலை காலமாகிவிட்டார். இவர் இளைப்பாறிய ஆசிரியர், சோதிடர் சுப்பிரமணியத்தின் மனைவியும், சிறீஸ்கந்தராசா (வர்த்தக வங்கி), சிறீபதி (யாழ் இந்துக்கல்லூரி). கலாவதி (யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், நிர்மலா (ஆசிரியை-புளியம்குளம்)வின் மாமியாரும் ஆவார். இறுதிக் கிரியைகள் 11-10-85 வெள்ளி பகல் 2 மணியளவில் மீசாலைவடக்கில் நடைபெறும். உறவினர்களும் நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும். [1200]

---

# மரண அறிவித்தல்
## திரு. A. F. அல்போன்சஸ்

வண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. A. F. அல்போன்சஸ் காலமாகிவிட்டார். இவர் காலஞ் சென்ற திருமதி பிலோமினா அல்போன்சஸின் (மலை) அன்புக்கணவரும், உன்மலா, Dr. ராஜ்குமார் (கனடா), அஞ்சலோ விஜயகுமார் (பொறியியலாளர் மலேசியா), சாமலா (அபுதாபி), சூரியகுமார் (கணக்காளர் லண்டன்), அமலகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், உமாகாந்தன் (நைஜீரியா), Dr. சாலினி (கனடா), மனோமா (மலேசியா), ஜோபெனடிக் (அபுதாபி), சாந்தா ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ் சென்ற A. R. நீக்கிலஸ், காலஞ் சென்ற A. செபஸ்தியாம்பிள்ளை, A. மனுவேற்பிள்ளை (சிங்கப்பூர்), காலம் சென்ற எலிசபெத் A. யோன்பிள்ளை ஆகியோரின் சகோதரனுமாவார். அன்னாரின் பூதவுடல் (12-10-85) சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இருந்து நல்லடக்கத்துக்காக பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.
இல. 55, 4ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
(1194)

---

# யார் இவர்?

(யாழ்ப்பாணம்)

அடையாளம் காணப்படாத வயோதிபரின் சடலம் ஒன்று யாழ். ஆஸ்பத்திரிச் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இவர் கடந்த மாதம் 29-ம் திகதி மயக்கமுற்ற நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு நேற்றுமுன்தினம் மரணமானார். (க)

---

# வழமைக்குத் திரும்பவில்லை

(நெடுந்தீவு)

கிசுவமடுப்பகுதியில் கடந்த வாரம் ஏற்பட்ட படுகொலைச் சம்பவத்தைத் தொடர்ந்து பிரமந்தனாறுப் பகுதி இன்னும் வழமைக்குத் திரும்பவில்லை.

இப்பகுதியில் இருந்த பல குடியேற்ற விவசாயிகள் தமது சொந்த ஊர்களுக்குத் திரும்பிவிட்டனர்.

---

# நெல்லியடி வித்தியாலயத்தில் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினமிரவு ஆயுதங்களுடன் புகுந்த கோஷ்டியினர் அங்கு கடமையிலிருந்த காவலாளியைப் பயமுறுத்திப் பல்லாயிரக்கணக்கான ரூபா பெறுமதி வாய்ந்த இயந்திர சாதனங்களைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனராம்.

இவ்வித்தியாலய மாணவர்களது கல்விக்குப் பயன்படுத்தப்படும் இயந்திரவியல் சாதனங்களே இவ்வாறு கொள்ளையடிக்கப்பட்டவையாகும்.

இதற்கு முன்பும் பலதடவைகள் இங்கு கொள்ளை நடந்துள்ளது. எத்தனையோ வேண்டுதல்களை விடுத்தும் அவைகள் இதுவரை திருப்பி ஒப்படைக்கப்படவில்லை. இந்நிலையில் மீண்டும் இங்கு நடந்த கொள்ளை சகலரையும் மனம் நோகச் செய்வதாகவும், இவ்வித்தியாலய மாணவர்களது கல்வியைப் பாழடையச் செய்வதாகவும் உள்ளதென வித்தியாலய அதிபர் தெரிவித்தார். (ஐ)

---

# 20 தமிழ் இளைஞர்கள் இன்று நீதிமன்றில் ஆஜர்

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, 19 மாதங்களுக்கு மேலாக வெலிக்கடை, பூஸா முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் 20 தமிழ் இளைஞர்கள் இன்று வெள்ளிக்கிழமை கொழும்பு மேல்நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளனர்.

இவர்கள் மீது குற்றப் பத்திரங்கள் இன்று தாக்கல் செய்யப்படவுள்ளன.

அதேநேரத்தில் இரு முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் 20 இளைஞர்கள் மீது இம் மாதம் 18-ம் திகதி கொழும்பு மேல்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. (மா)

---

# மதுரையில் இலங்கைத் தமிழ் அகதிகள்

(சென்னை)

இலங்கையிலிருந்து தமிழகம் வந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகளில் இதுவரை 356 குடும்பங்களைச் சேர்ந்த 1,588 பேர் மதுரை மாவட்டத்தில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

---

# இன்று வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி ஸ்ரீபத்திரகாளி அம்மன் தேவஸ்தான மகா கும்பாபிஷேகத்தை ஒட்டிய சிறப்புமலரொன்று இன்று வெள்ளிக்கிழமை மாலை ஆறு மணியளவில் மேற்படி ஆலய மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு. செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பல சமய அறிஞர்கள் சிறப்புரை யாற்றவுள்ளனர்.

---

# சட்டவிரோத மின்பாவனை

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக மின்சாரம் பாவித்தவர்களிடமிருந்து யாழ். மின்சாரசபை ஊழியர்கள் நேற்றுமுன்தினம் கைப்பற்றிய வயர்களின் பெறுமதி சுமார் ஐயாயிரம் ரூபாவுக்கு மேல் இருக்கலாம் என்று தெரியவருகிறது.

மின்வயர்களை இழந்தவர்களில் சிலர் நேற்று வயர்களைப் பெறுவதற்காக யாழ். மாநகர சபை மின்சாரப் பகுதி அலுவலகத்துக்குச் சென்றபோதிலும் வயர்கள் எவருக்கும் கொடுக்கப்படவில்லை.

சட்டவிரோதமாக மின்சாரம் பாவித்தவர்களிடம் ஒரு தொகைப் பணத்தை அறவிட்டபின்னரே வயர்கள் திருப்பி ஒப்படைக்கப்படவிருக்கிறது. (ஐ)

---

# புனர்வாழ்வு சபை

(ஜலோலி)

அண்மையில் திருமலை, வவனியா ஆகிய இடங்களில் ஏற்பட்ட வன்செயல்களால் பாதிக்கப்பட்டுப் பருத்தித்துறைக்கு வந்துள்ள அகதிகளின் நலன்களைக் கவனிப்பதற்காகப் பருத்தித்துறையில் அகதிகள் புனர்வாழ்வுச் சபையொன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இந்த அகதிகள் புனர்வாழ்வுச் சபையின் தலைவராகத் திரு. என். குணசீலனும், செயலாளராகத் திரு. என். சிவசுப்பிரமணியமும், பொருளாளராக திரு. எஸ். நந்தகுமாரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

---

# "ஈழம் செய்திப் பலகை"

(யாழ்ப்பாணம்)

'ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல். எவ்) வெளியிட்டுவரும் ஈழம் செய்திப்பலகைச் சுவரொட்டியில் பின்வரும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

"ஸ்ரீ லங்கா அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தமுடியாது (ஈ. என். எல். எவ்)

பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்னைக்கு தீர்வுகாணப்படும் நம்பிக்கை (இந்திய அரசு)

திருமலைமக்கள் எதிர்நோக்கும் நெருக்கடி, சொந்த மண்ணில் வாழமுடியாதவாறு ஸ்ரீ லங்கா கூலிப்படைகள் அட்டகாசம். அகதிகளானோர் இடம்பெயர போக்குவரத்து வசதிகள் இல்லை. திருமலையில் இருந்து முல்லைத்தீவு நோக்கி வருவதற்குக் 'கடற்படை' தடை, வாலிபர்கள் கைது செய்யப்படுகின்றனர். அலம்பில் அகதிமுகாமிலுள்ளவர்களைக் கடினவேலைகளுக்கு இராணுவம் நிர்ப்பந்திக்கிறது.

பொதுமக்களிடமிருந்து மோட்டார் சைக்கிள்கள் கடத்தப்படுவதற்கும் தமக்கும் சம்பந்தமில்லையெனவும் தமது பெயரைப் பாவிப்போரை அறியத்தருமாறும் கூறி ஈ. பி. ஆர். எல். எவ். துண்டுப் பிரசுரம்.

'தமிழ்மக்களைப் படுகொலை செய்வதற்கு ஸ்ரீலங்கா அரசு உங்களைப் பாவிக்கிறது என விளக்கி சிங்கள மொழியில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஸ்ரீலங்கா ஆயுதப்படையினருக்குத் துண்டுப்பிரசுரம். (மா)

---

# யாழ்/தூர சேவை லொறி உரிமையாளர்களுக்கு ஓர் அறிவித்தல்

5-10-85 இல் எமது சங்க அமைப்புக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய, எமது சங்க உறுப்பினர்களை கூட்டிணைக்கும் வேலைகள் இன்னும் முடிவடையாததால், 12-10 85 இல் கூடவிருந்த கூட்டம் 19-10-85 இல் 153, ஆஸ்பத்திரி வீதி (முன்னாள் புகையிலை கட்டுத்தாபன) கட்டிடத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம்.

பி. கு: சகலலொறி உரிமையாளர்களும் தயவுசெய்து தவறாது 19-10-85 கூட்டத்திற்கு வருகை தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு
யாழ்/தூர சேவை லொறி உரிமையாளர்
அமைப்புக் குழுக் காரியதரிசி.
அமைப்புகுழு. [1199]

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] வீதி 68-ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 11-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 10036/81. Eelanadu P. O. Box: 49, Telegram: Eelanadu Telephone: 22389 — [illegible]